வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com  மலர் : 05  18.05.2024 சனிக்கிழமை  இதழ் : 139  பக்கங்கள் : 12

### காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்:

# பொறுப்பானவர்களை இலங்கை பொறுப்புக்கூற செய்யவேண்டும்

## ஐ. நா. மனித உரிமைகள் பணிமனை



- அரசு பொது மன்னிப்புக் கோர வேண்டும்
- குற்றவாளிகள் நீதியிலிருந்து தப்பிக்கின்றனர்

ஜெனிவா, மே 18

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களின் தலைவிதி மற்றும் இருப்பிடம் ஆகியவற்றைத் தீர்மானிக்கவும் - வெளிப்படுத்தவும் இலங்கை அரசாங்கம் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன், இவற்றுக்குப் பொறுப்பானவர்களை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தவேண்டும் என்று ஐ. நா. மனித உரிமைகள் பணிமனை வலியுறுத்தியுள்ளது. 11

## தொழில் முனைவோருக்கு அரசாங்கம் முழு ஆதரவு!

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே 18

நவீன தொழில்நுட்பத்துடன் விவசாயம் செய்ய முன்வரும் தனியார் தொழில் முனைவோருக்கு அரசாங்கம் முழு ஆதரவு வழங்கும் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்த ஆண்டில் 100 பிரதேச செயலாளர் பிரிவுகளில் விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டம் நடை முறைப்படுத்தப்படும் என்றும் 11

## இந்திய கடற்பரப்பில் நுழைந்த 14 இலங்கை மீனவர்கள் கைது!

சென்னை, மே. 18

இந்திய கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் இலங்கை படகுகள் ஐந்தை பறிமுதல் செய்துள்ள இந்திய கடலோர காவல்படை, அதிலிருந்த 14 இலங்கை மீனவர்களையும் கைது செய்துள்ளது. நேற்றுமுன்தினம் இந்த சம்பவம் நடந்தது.

நாகபட்டின கடற்பகுதியில் கைது செய்யப்பட்ட இவர்கள் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

## முள்ளிவாய்க்கால் படுகொலை; 15ஆவது நினைவேந்தல் இன்று!

முல்லைத்தீவு, மே 18

தமிழின அழிப்பின் அடையாளமான முள்ளிவாய்க்கால் படுகொலையின் 15ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்றாகும்.

முள்ளிவாய்க்கால் படுகொலையின் பிரதான நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் நடைபெறும் என்று நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு அறிவித்துள்ளது.

இதேநேரம், இந்த நிகழ்வுக்கு சமாந்தரமாக தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் 11

## தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் கட்சிகளை ஒன்றிணைக்கும் ரெலோ

வவுனியா, மே 18

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் விடயம் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். அத்துடன், தேசியத்தின்பால் பற்றுள்ள தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் ரெலோ களமிறங்கியுள்ளதாக அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமிழ்க் 11

## இலங்கையின் கடன் மறுசீரமைப்பு இன்னமும் பேச்சு மட்டத்திலேயே!

### ஐ. எம். எவ். தெரிவிப்பு

வாஷிங்டன், மே 18

வெளியக கடன் வழங்குநர்களுடனான கடன் மறுசீரமைப்பில் இலங்கை இன்னும் பேச்சு மட்டத்திலேயே உள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயன்முறையில் அடுத்த கட்டமாக முன்னெடுக்கப்பட வேண்டிய நகர்வுகள் குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் பிரிவு பணிப்பாளர் ஜூலி கொஸாக் விரிவாக விளக்கமளித்துள்ளார்.

வாஷிங்டனில் நடந்த சர்வதேச 11

## மிருசுவில் படுகொலையாளி விடுதலை: கோட்டாபயவுக்கு நீதிமன்று அழைப்பு

கொழும்பு, மே 18

மிருசுவிலில் 8 தமிழர்கள் கொல்லப்பட்ட வழக்கின் கொலையாளியான இராணுவ சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவுக்கு பொது மன்னிப்பு அளித்தது தொடர்பில் நீதிமன்றில் தனது தரப்பு உண்மைகளை தெரிவிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அழைப்பாணை அனுப்புமாறு உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மாற்றுக் கொள்கை மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று இரு நீதியரசர்கள் கொண்ட அமர்வில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட 11

## பாதிக்கப்பட்ட மக்களின் குரலுக்கு இலங்கை செவிசாய்க்க வேண்டும்

### சர்வதேச சட்ட வல்லுநர்கள், நிபுணர்கள் 72 பேர் கூட்டாக வலியுறுத்து

வாஷிங்டன், மே 18

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவ முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளைக் கைவிடுமாறு சர்வதேச சட்ட வல்லுநர்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

உள்ளக பொறிமுறை ஊடாக உண்மை மற்றும் நீதியை அடைந்து கொள்ள முடியாது என பாதிக்கப்பட்ட தரப்பினரால் முன்வைக்கப்படும் கருத்துக்களுக்குச் செவிசாய்க்குமாறும் 11

## நினைவேந்தல் உரிமையை யாரும் மறுக்க முடியாது!

### அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 18

தங்கள் அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கு அனைத்துக் குடும்பங்களுக்கும் உரிமையுள்ளது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் தளத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 11

## மேலாதிக்கத்தின் மூலம் நல்லிணக்கம் ஏற்படாது

### 'மக்கள் மனு' வடக்கு, கிழக்கு சிவில் சமூக குழு

யாழ்ப்பாணம், மே 18

மேலாதிக்கத்தால் ஒருபோதுமே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. இதனை புரிந்துகொண்டு செயல்பட்டால் மட்டும்தான், அரசாங்கத்தால் நல்லிணக்க முயற்சியில் முன்னோக்கி பயணிக்கமுடியும் - இவ்வாறு தெரிவித்துள்ளது 'மக்கள் மனு' வடக்கு, கிழக்கு சிவில் சமூக குழு.

மே 18 நினைவேந்தலை முன்னிட்டு அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் மூத்த தலைவர் இரா. சம்பந்தன், தமது கட்சியினருக்கு தெரிவித்தார் என்று கூறி, பாராளுமன்ற உறுப்பினர் ம. ஆ. சுமந்திரன் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

"தமிழர்களின் உரிமைக்கான போராட்டம் மிக நீண்டது. பல கட்டங்களைத் தாண்டி வந்துள்ளோம். ஒஸ்லோ அறிவிப்பு அதில் உச்சமானது. உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப் படையில் இணைந்த வடக்கு - கிழக்குக்கு சமஷ்டி முறையிலான தீர்வுக்கு அந்த அறிவிப்பு மூலம் இலங்கை அரசு இணங்கி வந்துள்ளது.

அதற்குக் குறைந்த எதற்கும் இணங்கும் ஏற்பாடுகளுக்கு நாம் போகமுடியாது. அந்த நிலைப் பாட்டை சிதறடிக்கும் விதமான ஒரு விஷப் பரீட்சைக்கு பொது வேட்பாளர் என்ற அடிப்படையில் தமிழினம் இணங்கவோ - இறங்கவோகூடாது." - மேற்கண்டவாறு சம்பந்தன் தெரிவித்தார் என்று சுமந்திரன் தெரிவித்திருக்கிறார்.

அண்மைக்காலமாக அதிகம் பேசப்பட்டு வரும் இந்தத் தமிழ் பொதுவேட்பாளர் விடயம் தொடர்பாக சம்பந்தன் தெரிவித்தார் என்று பல தடவைகள் சில பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டிருக்கின்றன. அதாவது, சம்பந்தனே நேரடியாக ஊடகங்களிடம் தெரிவித்தார் என்று வெளிவந்த அந்தச் செய்திகளில் தெரிவிக்கப்படாத ஒரு விடயத்தை சம்பந்தன் இப்போது வேறு ஒருவர் மூலம் கட்சிக் காரர்களுக்கு தெரிவித்திருக்கிறார்.

இந்த அறிவிப்பைப் படித்த பின்னர், ஓர் அரசியல் பிரமுகர் இந்த ஊர்க்குருவியோடு தொடர்புகொண்டு கேட்டார் "அண்ணே இந்த ஒஸ்லோ ஒப்பந்தம் என்றால் என்ன?" என்று.

அப்போதுதான், சில வருடங்களுக்கு முன்னர் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சுகு சிறீதரன் ஒரு கூட்டத்தில் பேசியபோது நகைச்சுவையாக சொன்ன ஒரு கதை ஒன்று ஞாபகத்துக்கு வந்தது.

தன்னிடம் ஓர் ஊடகவியலாளர் தொடர்புகொண்டு கேட்டாராம், அண்ணே இந்தத் திம்பு கோட்பாடு என்றால் என்ன? என்று. அதற்கு தான் - இலங்கைத் தமிழர்களை ஒரு தேசமாக அங்கீகரித்தல், சுயநிர்ணயம், தாயகம் - என்று தான் சொல்லிக்கொண்டிருக்க, அவர் இடைமறித்து இது எல்லாம் தெரியும் அண்ணே, அந்தத் திம்பு கேட்பாடு என்றால் என்ன? என்று திரும்பக் கேட்டாராம். அப்போதுதான் திம்பு என்பது பூட்டான் நாட்டின் தலைநகர மடா தம்பி. அங்கதான் அரசாங்கத்துக்கும் தமிழர் தரப்புக்குமிடையில் இந்தியாவின் மத்தியஸ்தத்தில் பேச்சு நடந்தது. அது தான் திம்பு பிரகடனம் எண்டுறது என்று விளக்கமளித்ததாக...

இப்போது பலரும் ஒஸ்லோ பிரகடனம் பற்றி பேசத் தொடங்கியிருக்கின்றனர். அதற்குக் காரணம் சம்பந்தன் ஐயா கூறினார் என்று வெளிவந்திருக்கும் செய்திதான் என்பது புரிந்து கொள்ளக்கூடியதே.

முதலில் அப்படியொரு பிரகடனமே இல்லை என்பதுதான் உண்மையானது. விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் ஒஸ்லோவில் நடந்த பேச்சின்போது இரு தரப்பும் ஒப்புக்கொண்ட விடயங்களை நோர்வே அறிக்கையாக வெளியிட்டிருந்தது. ஒவ்வொரு பேச்சின்போதும் முடிவில் வெளியிடப்படுகின்ற அறிக்கை போன்றதுதான் அது. ஆனால், அந்த பேச்சில் இரு தரப்பும் இணங்கிய விடயம் சம்பந்தன் ஐயா சொல்வது போல, உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைந்த வடக்கு - கிழக்குக்கு சமஷ்டி முறையிலான தீர்வுக்கு அந்த அறிவிப்பு மூலம் இலங்கை அரசு இணங்கி வந்துள்ளது என்பதல்ல.

அந்தத் தீர்வு குறித்து தொடர்ந்து பேசுவதற்கே அரசும் புலிகளும் இணங்கினார்களே அன்றி, அப்படியொரு தீர்வுக்கு இலங்கை அரசு இணங்கியது என்பதல்ல என்பது சம்பந்தன் ஐயாவுக்கு தெரியாதது அல்ல.

அதுபற்றி தொடர்ந்து பேசுவதற்கே இரு தரப்பும் இணக்கம் தெரிவித்தார்கள். ஆனால், அதனை விடுதலைப் புலிகளின் தலைவரே நிராகரித்து விட்டார். அதற்குக் காரணம் அவர் அப்போதும் தனிநாடு ஒன்றை அமைக்கமுடியும் என்று நம்பினார். ஆனால், இலங்கை அரசு தரப்பு பேசுவதற்கு சம்மதித்து என்பது அந்தத் தீர்வை ஏற்றுக்கொண்டு என்பதல்ல.

அதைவிட முக்கியமானது, அப்போது வடக்கு மாகாணத்தின் பெரும் நிலப்பரப்பையும் கிழக்கு மாகாணத்தின் கணிசமான நிலப்பரப்பையும் விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு ஓர் அரச நிர்வாகத்தையே நடத்திக் கொண்டிருந்தபோது, எங்கே நாடு பிரிந்துவிடுமோ என்ற அச்சம் இலங்கை அரசாங்கத்துக்கு இருந்தபோது, சமஷ்டி பற்றி பேசுவதற்கு இணங்கியது.

இப்போது வெடுக்குநாறி மலையில் ஆதிசிவனை வழிபடுவதற்குக்கூட செல்ல முடியாத நிலையில் இருந்துகொண்டு - தமிழர் அரசியல் தலைமை யாரிடம் இருக்கின்றது என்பதே தெரியாத நிலையில் - சிறிய சிறிய குழுக்களாக பிரிந்துபோய் இருக்கின்ற நிலையில் - அதைப் பற்றி பேசத் தொடங்கியிருக்கிறோம்.

பதின்மூன்றை முழுமையாக தரவே தெற்கின் அரசியல் தலைமை தயாராக இல்லாத போது சம்பந்தன் ஐயா, ஒஸ்லோ அறிவிப்புப் பற்றி பேசத் தொடங்கியிருக்கிறார்.

அதுபற்றிப் பேசுவதற்கு ஆகக்குறைந்தது தமிழர்கள் அனை வரும் ஓர் அணியாக - ஒன்றுபட்டு நிற்கிறார்கள் என்றாவது காட்டவேண்டிய அவசியம் நம் முன் இருக்கின்றது என்பதையாவது ஐயா தனது கட்சிக் காரர்களுக்கு சொல்லவேண்டும். அதனால்தான் பொது வேட்பாளர் பற்றியும் பேசவேண்டியிருக்கின்றது.

- ஊர்க்குருவி.

# அரச துறையில் ஊழலை ஒழிக்க புதிய வேலைத் திட்டம் ஆரம்பம்!

### துறைசார் மேற்பார்வை குழு தலைவர் தகவல்

கொழும்பு, மே 18

அரச துறையில் ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்கு தொழில்நுட்பம் மற்றும் டிஜிற்றல் முறைகள் மூலம் கொடுக்கல் - வாங்கல்களை மேற்கொள்ளும் வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ரா ராச்சி தெரிவித்தார்.

அரசியல் பொறிமுறையால் கொள்கை வகுக்க மாத்திரமே முடியும் எனவும் அந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த அரச உத்தியோகத்தர்கள் மக்களுக்கான தமது கடமையை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு, இதுவரை பொதுமக்களின் நலன்களுக்காகப் பெரும் பணிகளைச் செய்துள்ளது. வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கப் பொறிமுறையை வலுப்படுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். அது தொடர்பாக, அரச துறையின் செயல்பாடு குறித்து,



துறைசார் மேற்பார்வைக் குழு ஆய்வு செய்து வருகிறது.

இதன்போது, உயர் நீதிமன்றம் உள்ளிட்ட நீதித் துறைக் கட்டமைப்பு, அமைச்சுக்கள் போன்ற அனைத்து அரச நிறுவனங்களின் வருடாந்த செயல்திறன் அறிக்கைகளை ஆய்வு செய்கிறோம். ஆனால், கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகளின் படி, சில நிறுவனங்களின் செயல்திறன் 23 வீதமாகவே இருக்கிறது.

இதற்கான காரணங்கள் குறித்து விசாரணை மேற்கொண்டபோது, பல்வேறு பதில்கள் கிடைத்தன. எவ்வாறாயினும், இந்த நிலைமையைத் தவிர்க்கும் வகையில் அண்மையில் பாராளுமன்றத்தில் சபாநாயகர் தலைமையில் அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண, மாவட்ட, பிரதேச செயலாளர்கள் உட்பட மக்களுடன் நெருக்கமாகச் செயல்படும் அரச அதிகாரிகளுக்கான விசேட செயலமர்வு ஒன்று நடத்தப்பட்டது.

இதன்போது மக்களுக்கு எவ்வாறு திறமையான மற்றும் நட்புறவான சேவையை வழங்குவது என்பது குறித்து அவர்களுக்குத் தெளிவூட்டப்பட்டது. மேலும், மக்களுக்கு தங்கு - தடையற்ற சேவையை வழங்க அரச ஊழியர்கள் கடமைப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்கியது.

அடுத்த வருடமும் சம்பளம் அதிகரிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைக்கும் அரச ஊழியர்கள், மக்களுக்கான கடமையை முறையாக நிறைவேற்ற வேண்டும். அரசியல் பொறிமுறையால் கொள்கையை உருவாக்க முடியும். அரச நிறுவனத்துக்கு கண்ணீருடன் வரும் மக்களைச் சிரித்த முகத்துடன் திருப்பி அனுப்பும் வகையில் அரச சேவை செயல்பட வேண்டும்.

மேலும், அரச துறையில் ஊழல் மோசடிகளைத் தடுக்கும் வகையில், தொழில்நுட்பம் மற்றும் டிஜிற்றல் முறைகள் மூலம் கொடுக்கல் - வாங்கல்களை நடத்த அவசியமான வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே உள்ள முறைகளை மேம்படுத்துவதற்கான கலந்துரையாடல்களையும் நாம் ஆரம்பித்துள்ளோம். அரச பொறிமுறை திறம்படச் செயல்படுவதற்கான வசதிகளை செய்துகொடுக்க வேண்டும். மேலும், வெற்றிடமாகவுள்ள பணியிடங்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். அரச உத்தியோகத்தர்களின் கடமைகள் தொடர்பிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## தாவடி பகுதியில் வசித்த இளம் தாய் மர்ம மரணம்!

யாழ்ப்பாணம், மே. 18

யாழ் - தாவடி பகுதியில் இளம் குடும்பப் பெண் ஒருவர் அவரது வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காளி கோவில் வீதி, தாவடி தெற்கு பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய ஜென்சியா சிவசூரியன் என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணின் கணவரும் மகளும் பிரான்ஸில் வசித்து வருகின்றனர்.

இவர் நேற்று முன்தினம் இரவு உணவருந்தி விட்டு தூக்கத்துக்குச் சென்றுள்ளார்.

எனினும் நேற்று அதிகாலை வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில், சடலம் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும், மரணத்திற்கான காரணம் கண்டறியப்படவில்லை எனவும் பரிசோதனைகளுக்காக உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். (அ)

## பனை அபிவிருத்திச் சபை அலுவலகத்துக்கு விஜயம் செய்த அமெரிக்கத் தூதுவர் ஜூலி!

யாழ்ப்பாணம், மே. 18

யாழ்.மாவட்டத்துக் விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்றுக் காலை, கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் தலைமை காரியாலயத்துக்கு விஜயம் செய்தார்.

இதன்போது பனை உற்பத்தி பொருள் தொடர்பிலும் ஆராய்ந்தார்.

குறித்த நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபையின் சபையின் தலைவர் கிருஷ்ணராஜா பத்திராஜா, பனை அபிவிருத்திச் சபையின் உத்தியோகத்தர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தனபால உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பனை அபிவிருத்திச் சபையின் சபையின் உற்பத்திகள் தொடர்பான கருத்தரங்கு ஒன்றும் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 18.05.2024 வியாழக்கிழமை ஈழநாடு
குரோதி வருடம், வைகாசி 05
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மே 18 - 15 ஆண்டுகள்

ஒரு பேரவலம் நிகழ்ந்து பதினைந்து ஆண்டுகளாகின்றன. இது போன்றதொரு நாளில்தான் - அவர் - இவர் எனப் பலர் வரக்கூடு மென்று நம்பிக்கை ஊட்டப்பட்டது. இறுதியில் எவரும் வரவில்லை. இவ்வாறானதொரு சூழலில்தான் அரசாங்கம் போர் வெற்றியை பறை சாற்றியது. இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் மற்றும் யுத்தக் குற்றங்களின் அடிப்படையிலேயே கடந்த பதினைந்து வருட கால தமிழர் அரசியல் முன்னெடுக்கப்பட்டிருந்தது. ஆனாலும், அந்த விடயத்தில் முன்னோக்கிப் பயணிக்க முடியவில்லை. ஆகக் குறைந்தது ஒரு சிறிய முன்னேற்றத்தையும் தமிழ் அரசியல் சமூகத்தால் நிரூபிக்க முடியவில்லை.

இதிலிருந்து தமிழர் சமூகம் எதனை படிப்பினையாகப் பெறப் போகின்றது? இன்றைய உலக அரசியலில் அரசுகள் தப்பித்துக் கொள்வதற்கான கதவுகள் ஏராளமுண்டு. ஆனால், பாதிக்கப்பட்ட மக்கள் உள்நுழைவதற்கு எந்தவொரு கதவும் இல்லை. அவ்வாறான கதவொன்று இருந்திருந்தால் கடந்த பதினைந்து வருடங்களில் அதனை எப்படியாவது திறந்திருக்கலாம்.

ஆனால், பாதிக்கப்பட்ட சிறிய மக்கள் கூட்டத்துக்கு கதவுகள் இல்லாதபோது புதிதாக ஏதாவது கதவொன்று தென்படுகின்றதா - ஏதாவது ஒரு கதவை தட்டித் திறந்துவிட முடியுமா? - இப்படியான கேள்விகளுடன்தான் கடந்த பதினைந்து வருடங்கள் சென்றிருக்கின்றன. ஆனால், எவ்வளவு முயற்சித்தபோதும் தமிழ் அரசியல் சமூகத்தால் எந்தவொரு கதவையும் தட்டித் திறக்க முடியவில்லை. உண்மை என்னவென்றால், பலம் பொருந்திய அரசுகளின் கதவுகள் அவ்வளவு சாதாரணமாகத் திறந்துவிடாது. அப்படியே சிறியளவில் திறந்தாலும்கூட, அது அவர்களின் நலனை நிறுத்துப் பார்ப்பதற்கான முயற்சியாகவே இருக்கும்.

எனவே, பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டம் கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்புகளையும் உச்சமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஏனெனில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலகில் உண்மையான நண்பர்கள் என்று எவருமில்லை. அரசுகளுக்கு மட்டும்தான் நண்பர்கள் உண்டு.

ஈழத் தமிழ் மக்களுக்கு நண்பர்கள் இருந்திருந்தால் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் மே - 18 ஒரு முடிவாகியிருக்காது. அவ்வாறானதோர் அவலமும் இடம்பெற்றிருக்காது. எல்லாம் முடிந்தபின்னர் ஒப்பாரி வைப்பதாலும் - ஆவேசப்படுவதாலும் உலகை ஒருபோதும் எதிர்கொள்ள முடியாது. இன்று காசாவில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை நாம் கண்டு கொண்டிருக்கின்றோம். காசாவும் முள்ளிவாய்க்காலும் ஒன்றல்ல. ஆனாலும், மனிதநேயம் என்று நோக்கினால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். யுத்தத்தால் தினமும் கொல்லப்படுகின்றனர். ஒப்பீட்டப்படையில் பலஸ்தீனத்துக்கு ஓர் அரசாங்கம் உண்டு - உலகில் நண்பர்களுண்டு. ஆயினும், அவர்களால் தங்கள் மக்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க முடியவில்லை.

எனவே, நினைவுகூரல்கள் வெறும் நினைவுகூரல்களாக மட்டும் இருந்துவிடக்கூடாது. ஒவ்வொரு நினைவுகூரல்களின்போதும், அடுத்த கட்டம் தொடர்பான தூரநோக்குடன்கூடிய பார்வை இருக்க வேண்டும். இன்றைய சூழலில் என்ன செய்ய வேண்டும் என்பதைத் துல்லியமாக மதிப்பிட்டு அதனை நோக்க அடியெடுத்து வைக்க வேண்டும். ஏன் இவ்வாறு நிகழ்கின்றது - ஏன் நாங்கள் எதிர்பார்த்த விடயங்கள் எதுவும் நடைபெறவில்லை என்பதன்மீது துல்லியமான மதிப்பீடு இருக்க வேண்டும். இல்லாவிட்டால் - வெறுமனே கண்ணீரிலும் கவலைகளிலும் ஆதங்கத்திலும் மற்றவர்கள் மீதான குற்றச்சாட்டிலும்தான் நமது காலம் கரைந்து போகும்.

# மே 18 : இன அழிப்புக்கான நீதிக்காக உழைப்போம் என்று உறுதி பூணும் நாள்

நிமால் விநாயகமூர்த்தி - கனடா

15 வருடங்கள் சென்றுவிட்டன. இது போன்ற நாட்களில்தான் எல்லாமும் நடந்தேறின. "எங்களை காப்பாற்ற எவராவது வரமாட்டார்களா?" என்னும் ஏக்கத்துடன் எங்கள் மக்கள் மரண உலகின் கைதியானார்கள். உலகம் காப்பாற்றும் என்று நாங்கள் நம்பினோம் - எங்களால் முடிந்தது எல்லாம் செய்தோம் - இறுதியில் எமது மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர் என்னும் செய்தி எங்களுக்கு கிடைத்தது.

நமது தேச விடுதலைக்காக ஆகுதியாகிப் போனவர்களை நெஞ்சில் வைத்துப் போற்றும் கண்ணீரை துடைத்துக் கொள்ளும் இந்த உன்னத நாளில், நாம் நமக்குள் கேட்டுக் கொள்வோம்? நம்மால் ஏன் முன்னோக்கிப் பயணிக்க முடியவில்லை? நாம் எதிர்பார்த்த விடயங்கள் ஏன் நடைபெறவில்லை? எங்களது இதுவரை கால முயற்சிகளுக்கு என்ன நடந்தது? முள்ளிவாய்க்கால் கஞ்சியைக்கூட சுதந்திரமாக காய்ச்சுவதற்கும் - பருகுவதற்கும் சுதந்திரமில்லாத வாழ்வையல்லவா எமது மக்கள் எதிர்கொண்டிருக்கின்றனர். இதன் பின்னரும் நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம் - சர்வதேசத்தோடு பேசிக் கொண்டிருக்கின்றோம் - ஐ. நாவுடன் தொடர்பில் இருக்கின்றோம் என்றெல்லாம் ஆறுதல் கொள்வதில் என்ன பெருமையுண்டு?

ஆரம்பத்தில் நம்பிக்கையை வாரி வழங்கிக் கொண்டிருந்த சர்வதேச அழுத்தங்கள் ஒரு மாயமான் என்னும் தோற்றத்தை பெற்றிருக்கின்றன. ஏனெனில், அவ்வாறான அழுத்தங்களால் சிங்கள ஆளும் வர்க்கம் அச்சம் கொள்ளவில்லை.

அவர்களின் ஒவ்வொரு செயல்பாடுகளும் அவர்கள் அச்சம் கொள்ளவில்லை என்பதையே காண்பிக்கின்றன. அழுத்தங்கள் தொடர்பில் அச்சம் கொள்ளாத அரசுகளிடமிருந்து நாங்கள் மனமாற்றத்தை எதிர்பார்க்க முடியாது.

கடந்த, 15 வருட கால புலம்பெயர் சமூகத்தின் பரப்புரை தோல்வியில் இருந்துதான் நாம் இதனை புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் சரியான பாதையில் சென்றிருக்கின்றோம் - வினைத்திறனாக செயல்பட்டு இருக்கின்றோம் - சூழ்நிலைகளை புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்பட்டிருக்கின்றோம் - சர்வதேசம் எங்களுக்காக அதன் செவிகளைத் திறந்து வைத்திருக்கின்றது. இப்படியெல்லாம் எங்களால் சொல்லிக் கொள்ள முடியுமானால், பின்னர் எவ்வாறு தொடர்ந்தும் நாங்கள் வீழ்ந்து கொண்டிருக்கின்றோம்? ஏன் இலங்கை அரசு கீழிறங்கவில்லை - தொடர்ந்தும் கீழிறங்க மறுக்கின்றது? இந்தக் கேள்விகளுக்கான பதிலில் நாம் கருத்தொற்றுமையுடன் சங்கமிக்கும்போது மட்டும்தான், நமது எதிர்கால செயல்பாட்டுக்கான கதவு திறக்கும்.

முள்ளிவாய்க்கால் துயரத்தின் உணர்வில் நாம் கலந்திருக்கும் இன்றையகால பகுதியானது, நமது தேசத்தை பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானதொரு காலப்பகுதியாகும். அரசியல் ரீதியில் நமது தேசம் பெரும் ஆபத்தை எதிர்கொண்டிருக்கிறது.

இது ஒரு வரலாற்று நெருக்கடி. வங்குரோத்து நிலைக்குள் சிக்கிக் கிடக்கும் இலங்கை மீண்டெழும் வழிகளை தேடி வருகின்றது. இந்தப் பின்புலத்தில் இலங்கையின் ஒரே ஒரு பிரச்னை பொருளாதார பிரச்னைதான் என்னும் புரிதலை திணிக்கும் முயற்சியில் சிங்கள இராஜதந்திரம் தந்திரமாகவும் - தூரநோக்குடனும் செயல்பட்டு வருகின்றது. இந்த சவாலை வெற்றி கொள்ள நாம் என்ன செய்யப் போகின்றோம்?

சவாலை வெற்றி கொள்ளுதல் என்பது ஒரு கட்டம் என்றால் - முதல் கட்டம் சவாலை எதிர் கொள்வதாகும். நாம் ஒரு தேசிய இனம் - தேசம் என்னும் நிலையில் எங்களை நிலை நிறுத்திக் கொள்வதுதான் முதல் கட்டமாகும். தமிழீழ விடுதலைப் போராட்டம் இடம்பெற்ற காலத்தில், ஆயுதப் போராட்டம் அனைத்துமாக இருந்தது. அதனால் ஒரு தேசமாக எங்களை நிலை நிறுத்துவதற்கு பிரத்தியேக முயற்சிகள் தேவைப்பட்டிருக்கவில்லை. ஆனால், இப்போது நிலைமை அப்படியல்ல. கடந்த 15 வருடங்களில் தாயக தலைமைகள் வீழ்ச்சியுற்றிருக்கின்றன. எமது மக்கள் தங்களுக்கள் சிதறியிருக்கின்றனர். அரச ஆதரவு அரசியல் ஊடுருவி, வளர்கின்றது. இவற்றை எதிர்கொள்வதுதான் தேசமாக எழுவதிலுள்ள முதல் சவாலாகும்.

இதனைக் கடக்க வேண்டும் என்றால், முதலில் மீண்டுமொருமுறை நாம் ஒரு தேசமாகவே இருக்கிறோம் என்பதை இலங்கை தீவுக்குள் நிரூபிக்க வேண்டும். இது எவருக்குமானதல்ல - மாறாக எங்களுக்கானது.

இந்த அடிப்படையில்தான், தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் தவிர்க்க முடியாத - தவிர்க்கக்கூடாத, விடயமாக இருக்கிறது. களமும் புலமும் இதில் ஓரணியாக இணைய வேண்டும். அனைத்துத் தமிழ் தேசிய தரப்புகளும் ஒரு குடையின் கீழ் வரவேண்டும். இலங்கைக்கான ஜனாதிபதி தேர்தல் அரங்கில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்கி, அவருக்கு தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாக்களிக்கும்போது அது கடந்த 15 வருடகால சரிவுகள் - சிதைவுகள் - தடுமாற்றங்கள் - தோல்விகள் - முரண்பாடுகள் அனைத்தையும் தமிழ்த் தேசிய வேள்வித் தீயில் எரித்து விடும். மேலும் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி இந்த ஜனாதிபதித் தேர்தலை ஓர் பொது வாக்கெடுப்பாக மாற்றுவது எமது சாமத்தியமாகும். நாம் புதுப் பொலிவுடன் நிமிர்வதற்கான சூழல் உருவாகும். இது இன்றைய சவாலை கடப்பதற்கான ஒரு வழியாகும்.

"காலத்தைத் தவறவிட்டால் கண்டவனெல்லாம் கதவை தட்டுவான்" என்னும் புதுவை அண்ணரின் கவி வரியை மனதில் நிறுத்தி, நாம் ஒரு தேசமாக திரள்வது ஒன்றேதான் 15 வருடகால துயர நினைவுகளுக்கு - நாம் தேசமாக செலுத்தும் உன்னத அஞ்சலியாகும்.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி - 18 சனிக்கிழமை
குரோதி வருடம் - வைகாசி 05
நல்ல நேரம் : 07.30 - 08.30
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : அதிதி




**மேடம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கனவு நனவாகும் நாள்.

**இடபம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கடகம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாறாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். கொள்வீர்கள். தடைகள் உடைபடும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பணிப்போர் வந்து நீங்கும். வியாபாரத்தில் மறைமுகப் பிரச்னைகள் வரும்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். மறைமுக பிரச்னைகள் வந்து விலகும். எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

**துலாம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். சிறப்பான நாள்.

**விருச்சிகம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டி வரும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். விலை உயர்ந்த மின்னணு மின்சார பொருட் களை வாங்குவீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள்.

**மீனம்**
சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள்.

# இஸ்ரோவின் ஏவூர்தி ஏவுதளம் தமிழ்நாட்டில் அமைகின்றது!

சென்னை, மே 18

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ தனது இரண்டாவது ஏவூர்தி (றொக்கெட்) ஏவுதளத்தை தமிழ்நாட்டின் தூத்துக்குடி - குலசேகரன் பட்டினத்தில் நிறுவவுள்ளது.

இதற்காக குலசேகரன்பட்டினம் சுற்று வட்டாரத்தில் கடற்கரையோரமாக அரைவட்ட வடிவில் 2,376 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, ரூ.950 கோடி செலவில் அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் குலசேகரன்பட்டினத்தில் விண்வெளி பூங்கா அமைப்பதற்கு இஸ்ரோவின் இன்ஸ்பேஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

குலசேகரன்பட்டினத்தில் 1,500 ஏக்கர் பரப்பில் விண்வெளி ஆய்வு மையத்திற்கு அருகில் விண்வெளி தொழிற்சாலை, உந்துசக்தி பூங்கா அமைய உள்ளது. இதற்காக விண்வெளி பூங்கா அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டு வருதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் முதலாவது ஏவூர்தி ஏவுதளம் ஆந்திராவின் சிறீஹரிகோட்டாவில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சட்டம் ஒழுங்கை கேலிக்கூத்து ஆக்கியதே தி. மு. கவின் சாதனை

## நாம் தமிழர் சீமான் சாடல்



சென்னை, மே 18

"சட்டம் ஒழுங்கை கேலிக் கூத்தாக்கி இருப்பதே தி. மு. கவின் 3 ஆண்டுகால சாதனை" என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

திருநெல்வேலி மாவட்டத்தில் அரசு விதிகளை மீறி கட்டப்பட்ட கட்டடங்கள், புறம்போக்கு நிலங்கள் ஆக்கிரமிப்பு உள்ளிட்டவை குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பல்வேறு ஆதாரங்களைத் திரட்டியும், பொதுநல வழக்கு தொடர்ந்தும் போராடி வந்த சமூக ஆர்வலர் பெர்ட்டின் ராயன் என்பவர் மீது கொலை வெறி தாக்குதல் நடத்தப்பட்டுள்ள செய்தி அதிர்ச்சியளிக்கிறது. தாக்குதல் நடந்து 10 நாட்கள் ஆகியும் குற்றவாளிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.

இதன்மூலம் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு எந்த அளவுக்குச் சீரழிந்து உள்ளது என்பது தெளிவாகிறது. இனியாவது மக்கள் உரிமைப் போராளிகள் தாக்கப்படுவது தொடராமல் இருக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்றுள்ளது.

(ஐ)

# தமிழ்நாட்டில் கல்வி கலைஞர் மயமாகிறது

வேலூர், மே 18

மத்திய பா. ஜ. க. அரசு கல்வியில் ஏதோ ஒரு சின்ன மாற்றம் கொண்டு வந்ததற்காக கல்வி காவி மயமாக்கப்படுகிறது என்று கூறினார்கள். ஆனால், இன்று தமிழகத்தில் கல்வி கலைஞர் மயமாக்கப்பட்டு வருகிறது தமிழிசை சவுந்தரராஜன் குற்றஞ்சாட்டினார்.

வேலூரில் நேற்று நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "தமிழகத்தில் அரசு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கை அதிகரித்து வருவதால் அதற்கான இடங்களை தமிழக அரசு கூடுதலாக்க வேண்டும். முன்னாள் முதலமைச்சர் கலைஞரை பற்றி 9, 10ஆம் வகுப்பு பாடப் புத்தகங்களில் இடம்பெற்றிருந்தது. தற்போது, எட்டாம் வகுப்பு பாடத்திலும் கலைஞரைப் பற்றி இடம்பெற்றுள்ளது.

மத்திய பா. ஜ. க. அரசு கல்வியில் ஏதோ ஒரு சின்ன மாற்றம் கொண்டு வந்ததற்காக கல்வி காவி மயமாக்கப்படுகிறது என்று கூறினார்கள். இன்று தமிழகத்தில் கல்வி கலைஞர் மயமாக்கப்பட்டு வருகிறது. ஒரு தலைவரைப் பற்றி எத்தனை பாட புத்தகங்களில் கொண்டு வருவீர்கள். இதற்கு வழிகாட்டு முறைகள் இருக்க வேண்டும். எத்தனையோ அறியப்படாத தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றியும் பாடப் புத்தகங்களில் இடம் பெற வேண்டும் - என்றார். (ஐ)

# போதைப்பொருளை கட்டுப்படுத்த முதல்வர் தலைமையில் ஆலோசனை!

சென்னை, மே 18

போதைப்பொருள் கடத்தலை தடுத்து போதை ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு முதல்வர் மு. க. ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில், தமிழகம் முழுவதும் போதைப்பொருள் நடமாட்டம் தொடர்பாகவும் மாவட்ட வாரியாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அதிகாரிகளுடன் முதல்வர் ஆலோசனை நடத்தினார்.

இதேநேரம், தமிழகத்தில் போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை சென்னை உயர்நீதிமன்றம் பாராட்டிய நிலையில், தமிழக அரசின் நடவடிக்கை மேலும் வேகமெடுத்துள்ளது. இதையடுத்தே முதல்வர் மு. க. ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார். இக்கூட்டத்தில், நீதிமன்றத்தின் பாராட்டு குறித்து தெரிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், அதிகாரிகளை பாராட்டினார். (ஐ)

# போதைப்பொருள் ஒழிப்பு அவசியம்!

சென்னை,

தமிழ்நாட்டில் போதைப் பொருளை ஒழிக்க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை - என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது எக்ஸ் தளத்தில் கூறியவை வருமாறு:

"சென்னை விமான நிலையத்தில் 22 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக வரும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

தி. மு. க. ஆட்சியில் அதிகரிக்கும் போதைப்பொருள் புழக்கம் குறித்து தொடர்ச்சியாக நான் எச்சரித்து வந்தும், அரசு அதனை தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக, தி. மு. க. அயலக அணி நிர்வாகியாக இருந்த ஒருவர், சர்வதேச போதைப்பொருள் மாபியாவாக இருந்த செய்தியே வந்து சேர்ந்தது. இனியாவது போதைப் பொருள் தடுப்பில் விழிப்புடன் துரிதமாக செயல்படுமாறு தி. மு. க. அரசின் முதல்வரை வலியுறுத்துகிறேன் - என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 20ஆம் திகதி வரை கடும் மழை!

## சிரேஷ்ட விரிவுரையாளர் பிரதீபராஜா

யாழ்ப்பாணம், மே. 18

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் 20ஆம் திகதி வரையில் கன மழைக்கான வாய்ப்பு உள்ளதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 13ஆம் திகதி இலங்கைக்கு தெற்கே வங்காள விரிகுடாவில் உருவாகிய காற்றுச் சுழற்சி தற்போது தீவிரமடைந்துள்ளது.

இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைக்கும் மழை எதிர்வரும் 20ஆம் திகதி வரை தொடரும் வாய்ப்புள்ளது.

குறிப்பாக இன்றும் நாளையும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கனமழை கிடைப்பதற்கான வாய்ப்புள்ளது.

வருடந்தோறும் சித்திரை சிறு மாரி என்ற கருத்து எங்களிடையே மிக நீண்ட காலமாக உள்ளது. இதனைச் சிலர் 'சித்திரைக்குழப்பம்' என்ற பெயரிலும் அழைப்பர்.

இம்முறை சித்திரைக் குழப்பம் சித்திரை மாத இறுதி நாட்களில் (தமிழுக்கு) காற்றுச் சுழற்சியோடு ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை எதிர்வரும் 20ம் திகதிக்கு பின்னர் கிழக்கு வங்காள விரிகுடாவில் மேலுமொரு காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகும் வாய்ப்புள்ளது. எனினும் இதனை எதிர்வரும் 19 ம் திகதிக்கு பின்னரே உறுதிப்படுத்த முடியும்.

அதேவேளை இந்த நிகழ்வுகளின் பின்னர் மீண்டும் வெப்ப நிலை அதிகரிக்கும்-என்றார்.



# மயந்தவுக்கு புதிய பதவி!

கொழும்பு, மே. 18

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க கட்சியின் நுவரெலியா மாவட்டத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மயந்த திஸாநாயக்க இதனை தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவிடமிருந்து நியமனக் கடிதங்களை பெற்றுக்கொண்டதாக அவர் கூறினார்.

அத்துடன் நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியுடன் இணைந்து தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# தவறான முடிவெடுத்து முதியவர் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், மே. 18

ஏழு கோவில் ஏழாலை கிழக்கு பகுதியில் மன விரக்தியில் இருந்த முதியவர் ஒருவர் நேற்று முன் தினம் வியாழக்கிழமை தவறான முடிவெடுத்து கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

ஐயாத்துரை தியாகராஜா (வயது 76) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த முதியவரின் மனைவி உயிரிழந்துள்ளார். அவரது பிள்ளைகள் அனைவரும் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில் குறித்த முதியவர் வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில், மன விரக்தியடைந்த அவர் நேற்று முந்தினம் அவரது வீட்டில் உள்ள கிணற்றில் விழுந்து உயிர்மாய்த்துள்ளார். இந்த காட்சி அங்கிருந்த சி.சி.ரி.வி கமெராவில் பதிவாகியுள்ளது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

# சேமசிங்கவுக்கு மிரட்டல் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, மே. 18

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுக்கு மர்ம நபர் ஒருவர் தொலைபேசியூடாக கொலை மிரட்டல் விடுத்ததாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் கோட்டை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவின் அலுவலகத்திற்கு நேற்று முன் தினம் பிற்பகல் இவ்வாறு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவை எதிர்வரும் தேர்தலில் போட்டியிட வேண்டாம் என அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதுடன் அதனையும் மீறி தேர்தலில் போட்டியிட்டால் கொலை செய்துவிடுவேன் என மர்ம நபர் மிரட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து இராஜாங்க அமைச்சர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் கோட்டை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, ஹபரண பிரதேசத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடைபெறும் என்றும் அதன் பின்னரே ஏனைய தேர்தல்கள் நடைபெறும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தமை குறிப்பிட்டிருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

# சீதா எலிய ஆலயத்துக்கு கலசங்கள் கொண்டு செல்லும் நிகழ்வு ஆரம்பம்

கொழும்பு, மே. 18

நுவரெலியா மாவட்டத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க சீதா எலிய ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் நாளை நடைபெறவுள்ள நிலையில், வெள்ளவத்தை மயூராபதி அம்மன் ஆலயத்திலிருந்து நேற்று காலை கலசங்கள் கொண்டு செல்லும் நிகழ்வுகள் ஆரம்பமாகியுள்ளன.



நேற்று காலை மயூரபதி ஆலயத்தில் நடைபெற்ற சிறப்புப் பூசை வழிபாடுகளில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா உள்ளிட்ட அரசியல்வாதிகள், பௌத்த மதத் தலைவர்கள் மற்றும் பக்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கொழும்பு, வெள்ளவத்தை, மயூரபதி ஆலயத்தில் நேற்று காலை 7 மணிக்கு நடைபெற்ற பூசைகளைத் தொடர்ந்து முதலாவது நாள் தீர்த்த ஊர்வலம் ஆரம்பமாகின.

குறித்த ஊர்வலமானது கொள்ளுப்பிட்டி இந்திய தூதரகம், காலி முகத்திடல் ஊடாக பிரதான வீதி, செட்டியார் தெரு, ஆமர் வீதி, அதிவேக நெடுஞ்சாலை ஊடாக கடுவல, அவிசாவளை, யட்டியாந்தோட்டை, கினிகத்தேனை, ஹற்றன், கொட்டக்கலை, தலவாக்கலை, பூண்டுலோயா, தவலந்தனை சந்தி ஊடாக இறம்பொடை ஸ்ரீ ஹனுமான் ஆலயத்தை சென்றடையும் என சீதா எலிய சீதையம்மன் ஆலய நிர்வாக சபைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இன்று காலை 7 மணிக்கு ஸ்ரீ ஹனுமான் ஆலயத்தில் நடைபெறவுள்ள பூசை [illegible]டுகளைத் தொடர்ந்து, இரண்டாவது நாள் தீர்த்த ஊர்வலம் ஆரம்பமாகி, லபுக்கலை, நுவரெலியா ஊடாக, நுவரெலியா சீதாஎலிய சீதை அம்மன் ஆலயத்தை சென்றடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஆலயத்தின் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, இந்தியாவின் திருப்பதி தேவஸ்தான தமிழ்நாடு ஆலோசனை குழு தலைவர் ஏ.ஜே.சேகர் 5 ஆயிரம் லட்டுக்களை வழங்குவதோடு, இந்த நிகழ்ச்சியிலும் கலந்துகொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# 3 மாதங்களில் 49 கைதிகள் சிறைகளிலிருந்து தப்பினர்

கொழும்பு, மே. 18

இவ்வருடத்தில் மூன்று மாதங்களில் 49 கைதிகள் சிறைச்சாலைகளில் இருந்து தப்பியோடியுள்ளனர்.

தப்பியோடியவர்களில் இருவர் மாத்திரமே இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான காமினி பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தப்பியோடியவர்களை கைது செய்யும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இதேவேளை, வீரவில திறந்தவெளிச் சிறைச்சாலை முகாமிலிருந்து நேற்று முன் தினம் இரவு கைதி ஒருவர் தப்பியோடியுள்ளார்.

எப்பாவெல பகுதியை சேர்ந்த 34 வயதான கைதி ஒருவரே தப்பிச் சென்றுள்ளார்.

பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் குறித்த கைதிக்கு அநுராதபுரம் நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்டிருந்தது. (அ)

# அனுமதியின்றி இரத்தினக்கல் விற்ற சீனருக்கு 2 ஆண்டுகள் சிறை!

கொழும்பு, மே. 18

அனுமதிப்பத்திரம் இன்றி இரத்தினக்கல் வியாபாரத்தை நடத்தி ஆறு மாதங்களில் 36 மில்லியனுக்கும் அதிக வருமானம் ஈட்டிய குற்றச்சாட்டில் சீனப் பிரஜை ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 2 ஆண்டுகள் கடூழியச் சிறை தண்டனை விதித்து மூன்றரை லட்சம் ரூபாய் அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

சீன மொழி பெயர்ப்பாளராக பணி புரிவதற்காக இலங்கைக்கு வந்து, அனுமதிப்பத்திரம் இன்றி இலங்கையில் இரத்தினக்கல் வியாபாரத்தை நடத்தி ஆறு மாத குறுகிய காலத்தில் 36 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வருமானத்தை பெற்ற சீன பிரஜை ஒருவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசிலிருந்து வெளியேறவும் நாம் தயாராக இருக்கிறோம்!

## மகிந்த ராஜபக்ஷ அதிரடி அறிவிப்பு

கொழும்பு, மே. 18

**அரசில் அங்கம் வகித்தாலும் கட்சியின் சுயாதீனத்தன்மையைக் காட்டிக்கொடுப்பதற்கு நாம் தயாரில்லை. அரசிலிருந்து வெளியேறுவதற்குகூட தயாராகவே இருக்கின்றோம் என்று பொதுஜன பெரமுன தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.**



அத்துடன், தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி எடுக்கும் எந்தவொரு முடிவையும் எதிர்கொள்வதற்கு தயார் எனவும் மகிந்த நேற்று முன் தினம் கூறினார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளும், மகிந்த வழங்கிய பதில்களும் வருமாறு-

கேள்வி - ஜனாதிபதித் தேர்தலையா அல்லது பொதுத்தேர்தலையா நீங்கள் கோருகின்றீர்கள்?

பதில் - எதற்கும் நாம் தயார். பொதுத்தேர்தலை வழங்கினால் அதற்கு தயார், ஜனாதிபதி தேர்தல் வைக்கப்படுமானால் அதற்கும் தயார். எனவே, இதில் எமக்கு பிரச்சினை கிடையாது. இரண்டுக்கும் தயாராகவே இருக்கின்றோம்.

கேள்வி - தேசிய வளங்கள் விற்பனை செய்யப்படுவதை கண்டித்துள்ளீர்களே?

பதில் - ஆம், நான் மட்டுமல்ல எமது கட்சியில் உள்ள 95 வீதமானோர் அதே நிலைப்பாட்டில்தான் உள்ளனர்.

கேள்வி - அப்படியானால் இது விடயம் தொடர்பில் அரசு முன்னெடுக்கும் நடவடிக்கையை அனுமதிக்கவில்லையா?

பதில் - அனுமதிக்கவில்லை.

கேள்வி - நீங்களும் அரசில் தானே இருக்கின்றீர்கள்?

பதில் - எமக்கு சுயாதீன உரிமை உள்ளது. அரசில் அங்கம் வகித்தாலும் அந்த சுயாதீன உரிமையை காட்டிக்கொடுக்கவில்லை.

கேள்வி - நீங்கள் விரும்பாத விடயங்கள் இடம்பெற்றால் அரசில் இருந்து விலகவும் தயாரா?

பதில் - நாட்டுக்காக எதற்கும் நாம் தயார். (அ)

# வேட்பு மனு தாக்கலான பின்பே வாக்குச்சீட்டு அச்சடிக்கப்படும்

## அச்சகத் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, மே. 18

வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட பின்னரே வாக்குச் சீட்டு அச்சடிக்கும் பணி தொடங்கும் என்று அரசாங்க அச்சுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வாக்குச் சீட்டுக்களை விரைவாக அச்சிடுவதற்குத் தேவையான பணியாளர்கள் மற்றும் அச்சடிக்கும் வசதிகள் அச்சகத்தில் இருப்பதாக அதன் தலைவர் கங்கானி லியனகே தெரிவித்தார்.

அத்துடன் வாக்குச் சீட்டு அச்சிடுவதற்குத் தேவையான பாதுகாப்பை தேர்தல் ஆணையகத்திடம் இருந்து வழங்குவதன் மூலம் இது தொடர்பான பணிகளை 28 நாட்களுக்குள் முடிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதற்கு பணம் தேவைப்படுவதாக கங்கானி லியனகே குறிப்பிட்டார். (அ)

# டயானா கமகேயிடம் வாக்குமூலம் பதிவு!

கொழும்பு, மே. 18

உயர்நீதிமன்றினால் பாராளுமன்ற உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேயிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

நேற்று முன்தினம் குறித்த வாக்குமூலத்தைப் பெற்றதாக பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அவர் பயன்படுத்திய கடவுச்சீட்டு, அடையாள அட்டை மற்றும் வேறு ஆவணங்கள் தொடர்பிலும் இதன்போது டயனா கமகேயிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக நிஹால் தல்துவ குறிப்பிட்டார். (அ)

# உயிரிழந்த பெண்ணுக்கு போலி ஆவணம் தயாரித்த கிராம சேவையாளர் கைதானார்!

கொழும்பு, மே. 18

உயிரிழந்த பெண் ஒருவர் உயிருடன் இருப்பதாகப் போலி ஆவணம் தயாரித்து வழங்கியதாகக் கூறப்படும் கிராம சேவகர், ஒருவர் களுத்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை, தேக்கவத்தை கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடமையாற்றும் கிராம சேவகர் ஒருவரே கைதானவராவார். இவர் வஸ்கடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயது நபர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் ஒருவர் உயிருடன் இருப்பதாகப் போலி ஆவணம் தயாரித்து பள்ளிவாசலுக்கு வழங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து இந்தப் போலி ஆவணத்தை எடுத்துச் சென்ற பெண் ஒருவர், இந்த ஆவணத்தைப் பயன்படுத்தி வேறு ஒருவருக்குச் சொந்தமான காணிக்கு போலி உறுதி தயாரித்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இப் பெண்ணை தனக்குத் தெரியாதெனவும் அவர் கேட்டதையடுத்து இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டதாகவும், சந்தேக நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (அ)

# பல்கலைக்கழகங்களில் பரீட்சைகள் நிறுத்தம்!

## மானியங்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, மே. 18

பல்கலைக்கழக கல்விசாரா தொழிற்சங்கங்கள் ஆரம்பித்துள்ள தொடர் வேலைநிறுத்தம் காரணமாக பல்கலைக்கழகங்களில் இளங்கலை பட்டதாரிகளின் அனைத்து பரீட்சைகளும் பிற்போடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக 50,000க்கும் மேற்பட்ட இளங்கலை மாணவர்கள் திட்டமிட்ட நேரத்தில் பட்டப்படிப்பை முடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அதன் உப தலைவர் பேராசிரியர் சந்தன உடவத்த தெரிவித்துள்ளார்.

மேலும் வேலைநிறுத்தம் காரணமாக பட்டதாரி படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் விவரங்கள் அடங்கிய பல்கலைக்கழக சேர்க்கை கையேடு வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கல்வி சாரா ஊழியர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேவையான யோசனைகளை கல்வி அமைச்சர் ஏற்கனவே அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை பணிப்புறக்கணிப்பு தொடரும் என பல்கலைக்கழக ஒன்றியத்தின் இணை அழைப்பாளர் தம்மிக்க எஸ்.பிரியந்த தெரிவித்துள்ளார்.

இன்னிலையில் 16ஆவது நாளாக நேற்றும் போராட்டம் தொடர்ந்தது. (அ)

# பிரித்தானிய நகரம் ஒன்றின் முதல்வராக இலங்கை தமிழர்!

லண்டன், மே. 18

பிரித்தானிய நகரம் ஒன்றின் புதிய முதல்வராக இலங்கையிலிருந்து ஏதிலியாகச் சென்ற தமிழர் ஒருவர் பதவியேற்றுள்ளார்.

தொழிற் கட்சியின் உறுப்பினரான இளங்கோ இளவழகன் என்பவரே இப்ஸ்விச் மாநகர முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற குறித்த பதவியேற்பு நிகழ்வின் போது இப்ஸ்விச் இந்து சமூகத்தின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



இந்து சமயத்தைச் சார்ந்த ஒருவர் முதல்வராக தெரிவு செய்யப்பட்டமை இப்ஸ்விச் நகரத்தின் பன்முகத் தன்மையையும், பன்முக கலாசாரத்தையும் எடுத்துக் காட்டுவதாக இந்து சமாசத்தின் தலைவர் சச்சின் கராலே கூறியுள்ளார்.

இதேவேளை இவ்விடயம் குறித்து கருத்து தெரிவித்துள்ள இளங்கோ இளவழகன், "நான் இன்று மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

இவ்வாறான பெரிய நகரத்தின் முதல்வராக இருப்பதில் மிகவும் பெருமைப்படுகிறேன்" என குறிப்பிட்டுள்ளார். (அ)

# முன்னாள் இராணுவ தளபதி சஜித் அணியுடன் இணைவு!



கொழும்பு, மே. 18

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க நேற்று ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இணைந்து கொண்டார்.

அவர் ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் முன்னாள் இராணுவ வீரர்களை கொண்ட குழுவான ரணவிரு பலகாய அமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

அவர் நேற்று காலை கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் இருந்து நியமனத்தை பெற்றுக்கொண்டார். (அ)

# எரிபொருள் இன்மையால் ஒதுங்கியது இந்திய படகு!

யாழ்ப்பாணம், மே. 18

இந்தியா - மல்லிப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த மீனவர்களது படகு ஒன்று நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை எரிபொருள் தீர்ந்ததனால் மாதகல் சம்பில்துறையில் கரையொதுங்கியது.

பெருமாள் வாஞ்சிநாதன், ராஜேந்திரன் மகேஷ், இளங்கோவன் ரஞ்சித்குமார் ஆகிய மீனவர்கள் படகுடன் கரையொதுங்கினர்.

குறித்த மீனவர்கள் மூவரும் இளவாலை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர். இளவாலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேந்தல் செயல்பாடுகளிலிருந்து தமிழ் மக்களை விலக வைப்பதற்கு முழு வீச்சில் செயல்படுகிறது அரசு!

## யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே. 18

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்தி நினைவேந்தல் செயற்பாடுகளிலிருந்து தமிழ் மக்களை விலக வைப்பதற்கு சிறிலங்கா அரசு முழுவீச்சில் செயற்பட்டு வருவதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.**

இது தொடர்பில் யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஊடக மற்றும் வெகுசன தொடர்புப் பிரிவு வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இறுதிக்கட்ட ஈழப்போரின் போது சிறிலங்கா இராணுவத்தினால் பாதிக்கப்பட்டு இனப்படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களை நினைவேந்தி, தமது உறவுகளை அஞ்சலிக்கும் நிகழ்வாக முன்னெடுக்கப்படும் "முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை" நினைவேந்தல்கள் வடக்கு - கிழக்கு தமிழர் தாயக நிலப்பரப்பெங்கும் உணவெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் சிறிலங்கா காவல்துறை, இராணுவம் உள்ளிட்ட படைத்தரப்புக்களினால் நினைவேந்தல் நிகழ்வுகள் தடுக்கப்பட்டு நினைவு கூறும் உரிமைகள் மறுக்கப்படும் வன்செயல்கள் அரங்கேறி வருகின்றமையை மாணவர் சமூகமாக கூர்ந்து நோக்குகின்றோம்.

அண்மையில் திருகோணமலை சேனையூர்ப் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சியினைப் பரிமாறி போரில் இனப்படுகொலைக்கு உள்ளானவர்களை நினைவு கூர்ந்த மக்கள் சிறிலங்கா காவல்துறையினால் கைது செய்யப்பட்டமை மற்றும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சியினை வழங்கிய பொதுமக்கள் சிறிலங்கா காவல்துறையினால் அச்சுறுத்தப்பட்டு, நினைவேந்தல் நிகழ்வுகள் தடுக்கப்பட்ட சம்பவங்களும் பதிவாகியும் உள்ளன.

குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் இருப்பென்பது ஆள்புல மற்றும் குடிசன ரீதியில் ஆக்கிரமிக்கப்பட்டு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ள நிலையில், நினைவேந்தலுடன் தொடர்புடைய நிகழ்வுகள் சிறிலங்கா படைத்தரப்புக்களினால் கண்காணிப்புக்கள், அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதோடு, அவற்றினைத் தடுக்கும் செயற்பாடுகளில் தீவிரத்தன்மையுடன் ஈடுபடுகின்றமையினை அண்மைக்காலங்களில் நோக்கக் கூடியதாகவுள்ளது.

அனைத்துலகச் சமூகத்தில் நினைவு கூறல் என்பது மனித உரிமைகளாக மதிக்கப்படும் நிலையில், 2009 ஆண்டு ஈழப் போரில் படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகளை நினைவேந்தும் வகையில் மே 18 - முள்ளிவாய்க்கால் தமிழினப்படு கொலை நினைவேந்தல்களினை மக்கள் முன்னெடுத்து வருகின் றனர்.

ஈழப்போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் போரினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு முறையான உளவியல் ரீதியாக ஆற்றுப்படுத்தல்களேதும் வழங்கப்படாதவொரு நிலையில் போரின் வடுக்களிலிருந்தும் அதன் கொடூர முகங்களிலிருந்தும் விடுபடுவதற்கான உளவியல் ஆற்றுப்படுத்தலுக்கான மாற்றாக நினைவேந்தல் நிகழ்வுகள் அமைந்திருக்கின்றன.

சிறிலங்காவின் படைத்தரப்புகளினால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களிற்கான நீதி என்பது சாத்தியமற்றுப் போய் சிறிலங்கா நீதிக்கட்டமைப்பின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கையிழந்துள்ள நிலையில் அண்மைக்காலங்களில் நினைவேந்தலுடன் தொடர்புடைய நிகழ்வுகளை தடுத்தல் மற்றும் முன்னெடுப்பவர்களை அச்சுறுத்தல்களிற்கு உள்ளாக்கும் சம்பவங்கள் யாவும் தொடர்ந்தும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களை உளநெருக்கடிகளிற்கு உள்ளாக்குகின்றன.

நினைவேந்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் பொதுமக்களை ஆங்காங்கே அச்சுறுத்தித் தடுப்பது மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அப்பாவிப் பொதுமக்கள் மீது பிரயோகிப்பதனூடாக நினைவேந்தல் செயற்பாடுகளிலிருந்து தமிழ் மக்களை விலக வைப்பதற்கு சிறிலங்கா அரசு முழுவீச்சில் செயற்பட்டு வருகின்றது.

குறிப்பாக, மக்களின் நினைவுகளினை அழிப்பதற்கு முயல்வதனால் சிறிலங்கா அரசும் அதன் படைத்தரப்புக்களும் தமிழ் மக்கள் தமது உரிமைகளிற்காக கூட்டுச் சேர்வதனையும் தம்மீது தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் செயன்முறைகளிற்கு எதிரான துலங்கல்களை வெளிப்படுத்தவும் முடியாதவொரு நிலையை ஏற்படுத்த முயற்சிக்கின்றன.

தமிழ் மக்களின் வலிகள் கூறும் நினைவுத் தூபிகளை அழித்தல் மற்றும் தமது போர் வெற்றிச் சின்னங்களை நிறுவுவதன் ஊடாக தமிழ் மக்களின் நினைவுகளை அழிப்பதில் பெரிதாக எதையும் சாதித்திராத சிறிலங்கா அரசு, முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் செயலென்பது தமிழ் மக்களிடையே முன்னரை விட எழுச்சியோடு முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அதனைத் தடுப்பதனூடாக தனது ஆக்கிமிப்பை சாதித்து விட முனைகின்றது.

இதுபோன்ற நினைவு கூறும் உரிமைகளை தடுக்கும் செயற்பாடுகள் பெயரளவிலாவது கூறப்படும் நல்லிணக்கத்தைப் பாதிக்கும் என்பதையும் இங்கே சுட்டிக்காட்டுவதோடு, சிறிலங்கா அரசின் இதுபோன்ற செயல்கள் யாவும் அனைத்துலகச் சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமவாயங்கள், பிரகடனங்களை மீறுவதோடு, சிறிலங்காவின் நீதிக்கட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து வித உள்ளகப் பொறிமுறைகளும் நம்பகமற்றவை என்பதனை தொடர்ந்தும் நிரூபிக்கின்றன எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# பொலிஸ் மோட்டார் சைக்கிளின் மீது மரம் வீழ்ந்து இரு பொலிஸார் காயம்!

கொழும்பு, மே. 18

இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மரமொன்று சரிந்து வீழ்ந்ததில் பொலிஸ் உத்தியோத்தர்கள் இருவர் காயமடைந்துள்ளனர் என கவரக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் மேலும் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் மூன்று மோட்டார் சைக்கிள்களில் மாத்தளையிலிருந்து அனுராதபுரம் நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கும் போது கவரக்குளம் பிரதேசத்தில் வைத்து,பாரிய மரமொன்று ஒரு பொலிஸ் மோட்டார் சைக்



கிள் மீது சரிந்து வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்த நிலையில் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் புவியியல் வினாத்தாள் குறித்து சர்ச்சை

கொழும்பு, மே. 18

இந்த ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் பொதுப் பரீட்சையில் மாணவர்கள் குழுவிற்கு புவியியல் வினாத்தாளின் ஒரு பகுதியை வழங்காத சம்பவம் தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

மினுவாங்கொடை அல் அமீன் முஸ்லிம் கல்லூரியில் நிறுவப்பட்டுள்ள குறித்த பரீட்சை நிலையத்தில் பணிபுரிந்த அதிகாரிகளிடம் பரீட்சை திணைக்களம் விசாரணை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வினாத்தாளில் தோற்றிய பரீட்சார்த்திகள் எவருக்கும் அநீதி இழைக்கப்படவில்லை என பரீட்சை திணைக்களத்தின் பேச்சாளர் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில், இது தொடர்பான சம்பவங்களுக்கு முகம் கொடுத்த மாணவர்கள் குறித்து தனித்தனியாக ஆய்வுகள் நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பேச்சாளர் குறிப்பிட்டார். (அ)

# வளங்களைத் தேசியமயமாக்கும் உரிமை அரசாங்கத்துக்கு இல்லை

## டலஸ் அழகப்பெரும கூறுகிறார்

கொழும்பு, மே. 18

நாட்டின் தேசிய வளங்களை தேசியமயமாக்கும் உரிமையோ, ஆணையோ ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திற்கு இல்லையென என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுனவின் இலட்சியத் தலைவரான மகிந்த ராஜபக்ச தற்போதைய நிர்வாகத்தை அனாதரவான நிலைக்குத் தள்ளியுள்ளார்.

தேர்தல் மோகத்தினூடாக தனது சொந்த அரசியல் இலக்குகளை அடைவதற்காக உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்புமனுக்களை இரத்து செய்வதற்கு ஜனாதிபதி யோசனை முன்வைத்துள்ளார்-என்றார். (அ)

# காற்றும் மழையும் அதிகரிக்கும்

கொழும்பு, மே. 18

நாட்டை சூழ உள்ள கடல் பிராந்தியங்களிலும் தென்மேல் பருவப்பெயர்ச்சிக்கு முன்னரான நிலைமை காரணமாக காற்றும் மழையுடனுமான வானிலை அதிகரித்துக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக சிரேஸ்ட வானிலை அதிகாரி கலாநிதி மொஹமட் சாலிஹீன் கூறினார்.

சப்ரகமுவ, மேல், வடமேல், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் அத்துடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அடிக்கடி மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களின் பல இடங்களில் நன்பகல் 12 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மத்திய, சப்ரகமுவ, மேல், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களில் 100 மில்லிமீற்றர் வரையிலான பலத்த மழை பெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (அ)

# கண்டியில் கடும் மழை!



கொழும்பு, மே. 18

கண்டி நகரில் பெய்த கடும் மழையினால், கண்டி ரயில் நிலையம் உள்ளிட்ட நகரின் பல பகுதிகள் நீரில் மூழ்கின.

சட்டவிரோத கட்டட நிர்மாணங்கள் மற்றும் முறையற்ற வடிகால் அமைப்பே இத் திடீர் வெள்ளத்திற்கான காரணம் எனக் கூறப்படுகிறது.

ரயில் நிலையத்தை அண்மித்துள்ள முறையற்ற வடிகால் கட்டமைப்பு மற்றும் வடிகால்கள் மூடப்பட்டமையே, ரயில் நிலையம் நீரில் மூழ்க காரணம் என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், கண்டி நகரில் 100 மில்லிமீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி ஒரே நேரத்தில் பெய்துள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

இதையடுத்து, போகம்பரவுக்கு பின்புறமாகவுள்ள மலைப் பகுதியிலிருந்து பெருமளவான வெள்ள நீர், ரயில் நிலையத்தை நோக்கி பெருக்கெடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறையில் திடீர் பரிசோதனை;

# பழங்கள் விரைவாக பழுக்க பயன்படுத்தும் இரசாயன பதார்த்தம்,தெளிகருவிகள் மீட்பு

அம்பாறை, மே. 18

**கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி சகீலா இஸ்ஸதீனின் பணிப்புரையின் பேரில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் தஸ்லிமா பஷீர், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் றயீஸ், இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரி இஸ்மாயில் ஆகியோருடன் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் இணைந்து நடத்திய உணவு நிலையப் பரிசோதனைகளில் சுமார் 67 நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.**

பழங்களை விரைவாக பழுக்க வைக்க பயன்படுத்தும் இரசாயன பதார்தங்களும், தெளிகருவிகளும் கண்டு பிடிக்கப்பட்டன.

இதன் போது மனித பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்களை தம் வசம் வைத்திருந்த 13 நிறுவனங்களில் இருந்து பெருமளவான உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டு சம்மாந்துறை நீதவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டன.





# கல்முனை சுகாதாரப் பணிப்பாளர் உல்லை வைத்தியசாலைக்கு விஜயம்

அம்பாறை, மே. 18

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன், பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சீ.எம்.மாஹிர் ஆகியோர் பொத்துவில் உல்லை வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இதன்போது வைத்தியசாலைகளின் நிலைமைகளைப் பார்வையிட்ட பணிப்பாளர், அங்கு நிலவும் குறைபாடுகள் மற்றும் தேவைகள் குறித்தும் பொறுப்பு வைத்திய அதிகாரியிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது வைத்தியசாலைக்கு மிக அவசியத் தேவையாக காணப்பட்ட தளபாடங்கள் சிலவற்றையும் கையளித்த பணிப்பாளர், அவ்வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படவுள்ள புனர்நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துமாறும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளை பணித்துள்ளார். (அ)

# வைத்தியசாலை திறந்து வைப்பு



திருமலை, மே 18

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தில் அதி கஷ்டப் பிரதேச மக்களின் சுகாதார சேவையை மேம்படுத்தும் நோக்கில் பதவி- ஸ்ரீபுரவில் பிரதேச வைத்தியசாலையொன்று நிறுவப்பட்டு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

சுமார் 35 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த வைத்தியசாலையால் தூர இடங்களுக்கு சென்று சுகாதார சேவை பெற்று வந்த அடிப்படை வசதிகள் அற்ற மிகவும் கஸ்டமான சூழ்நிலையில் வாழும் இப் பிரதேச மக்கள் நன்மையடையவுள்ளனர்.

# முஷாரப் எம்.பி.யின் நிதியில் அந்நூர் பாலர் பாடசாலைக்கு புதிய கட்டடம்

திருமலை, மே. 18

பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப்பின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ள மாவடிப் பள்ளி அந்நூர் பாலர் பாடசாலையின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன் தினம் வியாழன் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் காரைதீவு உப பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பி. ராஜகுலேந்திரன், மாவடிப்பள்ளி ஜூம்ஆப் பள்ளிவாசல் தலைவர் அப்துல் மனாப் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதன்போது பள்ளிவாசல் பேஷ் இமாம் எம். பாரிஸ் மௌலவி விசேட துஆப் பிரார்த்தனையை மேற்கொண்டார்.



மாவடிப்பள்ளி அந்நூர் பாலர் பாடசாலைக்கென கட்டடம் ஒன்று அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி அதன் நிர்வாகத்தினரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப்பின் இணைப்பாளர் அஸாம் அப்துல் அஸீஸ் மௌலவி மேற்கொண்ட முயற்சியின் பயனாக அவர் இக்கட்டட நிர்மாணத்திற்காக தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து 10 இலட்சம் ரூபாவை முதற்கட்டமாக ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேசிய கல்வியற் கல்லூரியில் மாபெரும் இரத்த தான முகாம்

மட்டக்களப்பு, மே. 18

அக்கரைப்பற்று இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள இரத்த தட்டுப்பாட்டினைக் கருத்திற் கொண்டு அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தான நிகழ்வு நேற்று முன் தினம் இடம்பெற்றது.

"உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்"எனும் தொனிப் பொருளின் கீழ் பீடாதிபதி சட்டத்தாணி கே.புண்ணிய மூர்த்தி தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வின்போது கல்வியியற் கல்லூரியின் **2022/2024** ஆம் பிரிவு ஆசிரிய பயிலுநர்கள், கல்வி, கல்விசாரா உத்தியோகத்தர்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தமை குறிப்பிடத்தக்கது.



அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையுடன் இணைந்து அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரி ஏற்பாடு செய்த இவ் இரத்த தான நிகழ்வு முழு நாள் நிகழ்வாக இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# சம்மாந்துறை வலயத்தின் கல்வி பணிப்பாளராக ஜாபீர்

காரைதீவு, மே. 18

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் தற்காலிக வலயக் கல்விப் பணிப்பாளராக கல்முனை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபீர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று வெள்ளிக்கிழமை அலுவலகத்திற்கு வருகை தந்து கடமையேற்றுக்கொண்டார்.

ஏலவே கடமையில் இருந்த வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ்.எம்.எம்.உமர் மௌலானா கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.

அந்த வெற்றிடத்தை நிரப்பும் முகமாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சால் இத் தற்காலிக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய பணிப்பாளர் ஜாபீர், ஏலவே சம்மாந்துறை வலயத்தில் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளராக சில காலம் கடமையாற்றி இருந்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் போரை முடிவுறுத்த அரசியல் தீர்வே சரியான வழி!

## புடினிடம் ஜின்பிங் வலியுறுத்து

பீஜிங், மே 18

**உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வரவும், உக்ரைன் நெருக்கடிக்கும் அரசியல் தீர்வுதான் சரியான வழி என்று தன்னை சந்தித்த ரஷ்ய ஜனாதிபதியிடம் சீன ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.**

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை 2 ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கிறது. அமெரிக்கா - ஐரோப்பிய நாடுகளின் உதவியுடன் உக்ரைன் படைகள் பதில் தாக்குதல் நடத்தி வருகின்றன. இதனிடையே, சீனாவுக்கு பயணம் செய்துள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங்கை சந்தித்து பேசினார்.

இதைத் தொடர்ந்து அவர்கள் கூட்டாக அளித்த பேட்டியில்,

உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வரவும், உக்ரைன் நெருக்கடிக்கும் அரசியல் தீர்வுதான் சரியான வழி என்று நம்புவதாக சீன ஜனாதிபதி கூறியுள்ளார்.



அமைதியான வழிகளில் நிலையான மற்றும் நியாயமான தீர்வை விரும்புவதாகவும் அமைதி பேச்சுகள் மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்து நாடுகளின் நலன்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் - என்று ரஷ்ய ஜனாதிபதி கூறினார். (ஐ)



# அதானி நிறுவன முதலீட்டுக்கு தடை விதித்தது நோர்வே அரசு

ஒஸ்லோ, மே 18

இந்தியாவின் முன்னணி பெருநிறுவனமான அதானி குழுமம் நோர்வேயில் முதலீடு செய்வதற்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது.

நோர்வேயின் மத்திய வங்கியான நோர்ஜஸ் வங்கி அரசாங்கத்தின் ஒய்வூதிய நிதிக்கு தகுதியான நிறுவனங்களின் பட்டியலில் இருந்து அதானி போர்ட்ஸ் நிறுவனத்தை நீக்குவதாக அறிவித்துள்ளது. மேலும், அமெரிக்காவின் எல்3 ஹாரிஸ் டெக்னாலஜிஸ் மற்றும் சீனாவின் வெய்சாய் பவர் நிறுவனங்களும் கைவிடப்பட்டன.

நோர்வே நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், போர் மற்றும் மோதல்கள் நிறைந்த பகுதிகளில் மனித உரிமைகள் மீறல் தொடர்பான விஷயங்களில் அதானி போர்ட்ஸ் நிறுவனத்துக்கு தொடர்பு உள்ளது. இதை ஏற்றுக்கொள்ள முடியாத அபாயம் எனக்கூறி இந்த நடவடிக்கை எடுத்துள்ளது. (ஐ)

# ரபா மீதான தாக்குதல் தொடரும் கூடுதல் படைகள் அனுப்பப்படும்!

## இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு



ஜெருசலேம், மே 18

ரபா நகரம் மீதான தாக்குதல் தொடரும், கூடுதல் படைகள் ரபா நகருக்குள் நுழையும் என இஸ்ரேல் நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கொலன்ட் தெரிவித்துள்ளார்.

ரபா நகர்மீது தாக்குதல் நடத்தினால் ஆயுதம் வழங்க மாட்டோம் என இஸ்ரேலுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்தது. முழு அளவில் ரபா மீது தரைவழி தாக்குதல் நடத்தக் கூடாது என அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகள் வலியுறுத்திய நிலையில் இஸ்ரேல், சிறிய அளவிலான வரையறுக்கப்பட்ட தாக்குதல் நடத்தப்படும் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் ரபா மீதான தாக்குதல் தொடரும், கூடுதல் படைகள் ரபா நகருக்குள் நுழையும் என இஸ்ரேல் நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் யோவ் காலன்ட் தெரிவித்துள்ளார். மேலும், ரபாவில் உள்ள ஹமாஸ் அமைப்பின் சுரங்கங்களை அழித்து, 20இற்கும் மேற்பட்ட ஹமாஸ் அமைப்பினரை கொன்றதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே ரபாமீது தாக்குதல் நடத்தப்படும் நிலையில் காசா முனையின் மற்ற பகுதிகளில் ஹமாஸ் அமைப்பினர் ஒன்றிணைந்து இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# நியூ கலிடோனியா தீவில் வன்முறையில் நால்வர் பலி!

பிரான்ஸ், மே 18

பிரான்ஸின் கட்டுப்பாட்டில் உள்ள நியூ கலிடோனியா தீவில் ஏற்பட்ட வன்முறைகளில் நால்வர் உயிரிழந்தனர். 200இற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரான்ஸில் இருந்து 17 ஆயிரம் கி. மீ. தூரத்தில் தென் மேற்கு பசுபிக் பெருங்கடலில் அமைந்துள்ள இப்பகுதி மூன்று மாகாணங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இங்கு நியூ கலிடோனியாவின் பழங்குடியினரான கனாக் இன மக்கள், ஐரோப்பிய காலனித்துவவாதிகளின் சந்ததியினரும் அதிகம் வசிக்கின்றனர்.

1853ஆம் ஆண்டு இந்த பகுதி பிரான்ஸூடன் இணைக்கப்பட்டது. ஆனாலும், பல நூற்றாண்டுகளாக இந்தப் பகுதியின் பூர்வகுடிகளான கனக் பழங்குடியின மக்களுக்கும் பிரஞ்சு மக்களுக்கும் இடையில் மோதல் போக்கு நிலவியது.

இந்நிலையில், பிரான்ஸ் பாராளுமன்றத்தில் ஒரு புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டது. நியூ கலிடோனியாவில் 10 ஆண்டுகளாக வசிக்கும் பிரெஞ்சு குடியிருப்பாளர்களை மாகாணத் தேர்தலில் வாக்களிக்க இந்த சட்டம் அனுமதிக்கிறது. இந்த சட்டத்துக்கு சில உள்ளூர்



தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இது தமது வாக்குகளை நீர்த்துப் போகச் செய்யும் என்று அந்த மக்கள் கருதுகின்றனர்.

இந்த விவகாரம் பூதாகரமாக வெடித்த நிலையில், நியூ கலிடோனியா முழுவதும் போராட்டம் வெடித்தது. இந்த சட்டத்தால் கனக் பழங்குடியின மக்களின் உரிமைகள் புறக்கணிக்கப்படும் என்று கூறி, கனக் ஆதரவாளர்கள் நடத்திய போராட்டத்தில் கலவரம் வெடித்தது. வீடுகளுக்கும் கடைகளுக்கும் தீ வைக்கப்பட்டதால், பல நகரங்கள் போர்க்களமாக காட்சியளித்தன. பிரெஞ்சு பேருந்துகள் மற்றும் வாகனங்களையும் போராட்டக்காரர்கள் சேதப்படுத்தினர். அவர்களை தடுக்கும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டனர்.

இந்த கலவரத்தில் கனக் பழங்குடியினத்தைச் சேர்ந்த 3 இளைஞர்கள் மற்றும் ஒரு பொலிஸ்காரரும் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வன்முறையைத் தொடர்ந்து போராட்டங்களைக் கட்டுப்படுத்த அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# ஜப்பானில் அதிகரிக்கும் "நட்பு திருமணங்கள்"

ரோக்கியோ, மே 18

ஜப்பானில் அண்மைக் காலமாக நட்பு திருமணங்கள் அதிகரித்துள்ளன.

இந்த உறவில் இருவர் சட்டபூர்வமாக திருமணம் செய்து கொண்டு ஒன்றாக குழந்தைகளை பெறலாம். ஆனால், இருவரும் தாம்பத்திய உறவில் ஈடுபடவோ அல்லது கணவன்-மனைவியாக இருக்க வேண்டியதோ இல்லை. இருவரும் குழந்தைகளை பெறுவதற்கு மருத்துவ வழிகளை தெரிவு செய்கின்றனர்.

2015ஆம் ஆண்டிலிருந்து சுமார் 500 இணைகள் இந்த நட்பு திருமணத்தில் இணைந்துள்ளனர். இந்தத் திருமணத்தில் தம்பதியர் ஒப்பந்தங்களை செய்து கொள்கின்றனர்.

உடலுறவை வெறுப்பவர்கள், ஓரினச் சேர்க்கையாளர்களே அதிகளவில் நட்பு திருமணத்தில் இணைகின்றனர் என்று தெரியவருகின்றது.

# புவியின் துருவ பகுதிகளை ஆய்வு செய்யவுள்ளது நாஸா

வாஷிங்டன், மே 18

பூமியின் துருவ பகுதிகளில் ஏற்படும் வெப்ப இழப்பை ஆய்வு செய்வதற்கும் மாறிவரும் காலநிலை குறித்த தகவல்களை தெரிந்து கொள்ள அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாஸா புதிய திட்டம் ஒன்றை தொடங்கியுள்ளது.

இதற்காக தனி ஆய்வகம் அமைத்து துருவப்பகுதிகளான ஆர்ட்டிக் மற்றும் அந்தாட்டிக்காவை ஆய்வு செய்யவுள்ளது. இந்தத் திட்டத்துக்காக 2 நவீன ரக செயற்கைகோள்களை இந்த மாத இறுதிக்குள் விண்ணில் செலுத்தப்பட்டு துருவ பகுதிகள் கண்காணிக்கப்படவுள்ளன.

காலநிலை மற்றும் பனி மாதிரிகளை ஆராயும் வகையில் விஞ்ஞானிகள் அந்தத் தகவலை பயன்படுத்தவுள்ளனர். இதன்மூலம் உலகின் கடல்நீர் மட்டம் உயர்வு, வானிலை மாற்றம் மற்றும் பனிக்கட்டிகள் உருகுதல் எத்தகைய விளைவுகளை அளிக்கக்கூடும் என்பதற்கான கணிப்புகளை அவர்கள் பெறவுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச் செயல்களின் மூலம் பெறப்படும் சொத்துக்களை அரசுடமையாக்க சட்டம்

## நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, மே. 18

**குற்றச்செயல்கள் மூலம் மோசடியான முறையில் சம்பாதித்த சொத்துக்களை அரச உடமையாக்கும் வகையில் புதிய சட்டம் கொண்டுவர விரைவில் நடவடிக்கை எடுப்போம் என நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.**

கண்டி நீதிமன்ற கட்டட வளாகத்தில் சட்டத்தரணிகளுக்கான புதிய காரியாலயம் ஒன்றுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீதியை நிலைநாட்டு நடவடிக்கையில் முக்கியமான விடயமாக இருப்பது, வழக்கு நடவடிக்கையில் சிக்கிக்கொண்டிருக்கும் பொது மக்களாகும்.

சட்டத்தரணிகளால் மேற்கொள்ளப்படுவது வேலை அல்ல. அது கௌரவமான தொழிலாகும். யாராவது ஒருவர் நீதிமன்றத்தை நாடுவது, அவரது பிரச்னைக்கு தீர்வுகாண வேறு ஒரு இடம் இல்லாத படியாகும். அதனால் நீதிமன்றத்துக்கு வரும் வாடிக்கையாளரின் உரிமையை நாங்கள் பாதுகாத்துக்கொடுக்க



வேண்டும்.

கடந்த காலங்களில் எமது நாட்டு பொதுளாதாரம் வீழ்ச்சியடைந்தது. நாடு அராஜகமானது. நாட்டை பொறுப்பேற்க யாரும் முன்வரவில்லை.

அவ்வாறான நிலைமை எதிர்காலத்தில் ஏற்படாமல் நாங்கள் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். நாடு அராஜகமாகி பொருளாதாரம் வீழ்ந்து, சட்டத்தின் ஆட்சி வீழ்ந்தாலே நாடு ஸ்திரமற்றதொரு நிலைக்கு சென்றது. நாட்டின் பொருளாதாரத்தை பலம்மிக்கதாக கட்டியெழுப்ப சட்டத்தின் ஆட்சியை பாதுகாத்தே ஆகவேண்டும்.

சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட, ஆட்சிக்குட்பட்டவர்களும் ஆட்சியாளர்களும் சட்டத்துக்கு உட்பட்டு செயல்பட வேண்டும். கடந்த இரண்டு வருடங்களில் 75 புதிய சட்ட திட்டங்களை அனுமதித்துக் கொள்ள நீதி அமைச்சுக்கு முடியுமாகி இருந்தது.

குற்றச் செயல்களின் மூலம் பெறப்படும் சொத்துக்களை அரசுடமையாக்குவது தொடர்பான புதிய சட்டம் கொண்டுவர கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதியை பெற்றுக்கொண்டோம். அதனை விரைவாக பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்து அனுமதித்துக்கொள்வோம். அதன் பிரகாரம் குற்றச் செயல்களின் மூலம் பெறப்படும் சொத்துக்களை அரசுடமையாக்க நடவடிக்கை எடுப்போம் -என்றார்.

(அ)



# கதிர்காமம் யாத்திரிகர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமம் உதவி!

வடமராட்சி, மே 18

வரலாற்று பிரசித்தி பெற்ற தொண்டைமனாறு செல்வ சந்நிதியான் ஆலயத்திலிருந்து கதிர்காமம் கந்தன் ஆலயத்துக்கு பாத யாத்திரை செல்லும் யாத்திரிகர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிப் பொருட்கள் நேற்று முன் தினம் வழங்கப்பட்டன.

தருமபுரம் - நெத்தலியாறு கிராமத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் வைத்து சத்துணவு வகைகள், ஜீவாகரம், பழ வகைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சென்ற குழுவினரே இவற்றை அன்பளிப்பு செய்தனர்.

(ஐ-2)

# 8 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, மே. 18

நாட்டிலுள்ள 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கையை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் விடுத்துள்ளது.

இதன்படி பதுளை, நுவரெலியா, இரத்தினபுரி, கண்டி, மாத்தளை, கேகாலை, களுத்துறை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வளவ கங்கை மற்றும் களு கங்கை ஆகிய ஆறுகளின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதால் குறித்த நீர்த்தேக்கங்களின் தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(அ)

# வேட்புமனு இரத்து செய்வது நடைமுறை சாத்தியமற்றது

## கூறுகிறார் மகிந்த தேசப்பிரிய



கொழும்பு, மே. 18

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்துச் செய்வது நடைமுறையில் தற்போது சாத்தியமற்றது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன், பாராளுமன்ற சட்டம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் ஒப்புதலுக்குப் பின்னர் இதுபோன்ற விடயங்கள் செயற்படுத்தப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்துச் செய்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்திருந்தார்.

வேட்புமனுக்களை சமர்ப்பித்துள்ள வேட்பாளர்கள் எதிர்நோக்கும் சிரமங்களை கருத்திற்கொண்டு இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அடுத்த வருடத்திற்குள் நடத்துவதற்கு சட்டமா அதிபர், தேர்தல் ஆணையாளர் மற்றும் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறு பிரதமருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

(அ)

# இலங்கையர்களை சட்டவிரோதமாக ரஷ்யா அனுப்பிய இருவர் மறியலில்!

கொழும்பு, மே 18

ரஷ்யா இராணுவத்தில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி சட்டவிரோதமான முறையில் ரஷ்யாவுக்கு இலங்கையர்களை அனுப்பி வைத்ததாகக் கூறப்படும் நுகேகொடை பிரதேசத்திலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் உரிமையாளர் மற்றும் முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இதேவேளை குறித்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் உரிமத்தை இடைநிறுத்தவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ரஷ்ய இராணுவத்தில் பணியாற்றுவதற்காக இலங்கையர்களைச் சுற்றுலா வீசா மூலம் ரஷ்யாவுக்கு அனுப்புவதாகக் கூறி ஒவ்வொரு நபர்களிடமிருந்தும் தலா 15 இலட்சம் ரூபாய் பணம் பெற்றதாகவும் தெரியவந்துள்ளது.

இவ்வாறு ரஷ்யாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட இலங்கையர்கள் ரஷ்யா - உக்ரைன் போர்க் களத்துக்குக் கடத்தப்பட்டுள்ளனர்.

இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தொடர்பில் இதுவரை 7 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் இந்த நிறுவனத்தால் சுமார் ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகளவான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

(எ)

# ரயிலில் மோதுண்டு ஒருவர் பலி!

கொழும்பு, மே. 18

மாத்தறையில் இருந்து காலி நோக்கி பயணித்த ரயிலில் மோதி நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து மாத்தறை, நுபே ரயில் கடவைக்கு அருகில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் மாத்தறை வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(அ)

# இலங்கையில் போதைப்பொருள் கடத்தல் 9 பாகிஸ்தானியர்களுக்கு 10 ஆண்டு சிறை

கொழும்பு, மே. 18

இலங்கையில் போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்ட 9 பாகிஸ்தான் பிரஜைகளுக்கும் தலா 10 வருடக் கடூழிய சிறைத் தண்டனை விதிக்க கொழும்பு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 614 கிராம் 36 மில்லி கிராம் ஐஸ் மற்றும் 614 கிராம் 34 மில்லி கிராம் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் கொழும்பு உயர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ள நிலையில் கொழும்பு உயர் நீதிமன்றம் அவர்களுக்கு 10 வருடக் கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பின்னர், குற்றவாளிகளை சிறைத்தண்டனை அனுபவிப்பதற்காகப் பாகிஸ்தானுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# அத்தியாவசிய பொருட்கள் சில்லறை விலை அறிவிப்பு

கொழும்பு, மே. 18

நாட்டில் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விற்பனை செய்யப்படும் 11 வகையான அத்தியாவசியப் பொருட்களின் வரையறுக்கப்பட்ட சில்லறை விலைகளை நுகர்வோர் விவகார அதிகார சபை வெளியிட்டுள்ளது.

அதன்படி, ஒரு கிலோ கோதுமை மா 179 முதல் 189 ரூபாய் வரையிலும், ஒரு கிலோ வெள்ளைச் சீனி 258 முதல் 275 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட வேண்டும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும், ஒரு கிலோ பருப்பு 288 முதல் 302 ரூபாய் வரையிலான விலையில் விற்பனை செய்யப்படவேண்டும் என்று நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அத்தோடு, வெள்ளை முட்டை ஒன்று 41 ரூபாய் முதல் 43 ரூபாய் வரையிலும், சிவப்பு நிற முட்டை ஒன்று 45 ரூபாய் முதல் 47 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலாதிக்கத்தின்...

விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில், முள்ளிவாய்க்கால் கஞ்சி விவகாரத்தில் தடைகள் ஏற்படுத்தப்படுவதும் கைதுகள் இடம்பெறுவதும் அரசாங்கத்தின் நல்லிணக்க முயற்சியின் போலிமுகத்தை அம்பலப்படுத்தியிருக்கின்றது. அரசாங்கம், தென்னாபிரிக்க ஆலோசனையின் கீழ், உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு தொடர்பில் உச்சரித்து வரும் நிலையில் தான், கஞ்சி காய்ச்சியவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். ஒருவர் அல்லது ஒரு குழுவினர் கஞ்சி காய்ச்சுவதும் அதனை மற்றவர்களுக்கு வழங்குவதும், நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் முன்னேற்றத்துக்கும் எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தும்? தர்க்கரீதியில் இதற்கு அரசால் பதிலளிக்கமுடி யுமா?

யுத்தம் நிறைவுற்று 15 வருடங்களாகின்றன. இந்தக் காலப்பகுதியில் இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்கள் அனைத்துமே நல்லிணக்கம் தொடர்பில் பேசிவந்திருக்கின்றன. ஆனால், இப்போதும்கூட பாதிக்கப்பட்ட மக்கள் தங்களின் உறவுகளின் இழப்பை அமைதியாக நினைவுகூரமுடியாமல் இருக்கின்றனர். ஏதோவொன்று தங்களை பின்தொடர்வதான அச்சத்துடன் தான் ஒவ்வொரு தமிழ் குடிமகனும் ஒன்றுகூட வேண்டியிருக்கின்றது. ஒரு நாட்டின் மக்கள் கூட்டம் அச்சமின்றி, அரசையும் அரசாங்கத்தையும் எதிர்கொள்ளவேண்டும். அவ்வாறான தொரு சூழல் இருந்தால்தான் அந்த நாட்டில் நல்லாட்சி இருப்பதாக நாம் கூறமுடியும். நடைபெற்ற - நடைபெறும் சம்பவங்கள் ஒவ்வொன்றும் இலங்கைத் தீவில் நல்லாட்சி பண்புகள் மிகவும் பலவீனமாக இருக்கின்றது என்பதையே காண்பிக்கின்றது.

இது ஒருவிடயத்தை தெளிவாக எடுத்துரைக்கின்றது - அதாவது, இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பில் இது வரையில் மேற்கொள்ளப்பட்ட இராஜதந்திர அழுத்தங்கள் அனைத்தும் தோல்வியுற்றிருக்கின்றன. நினைவுகூரல் மீதான தடைகளும் இடையூறுகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

உணர்வால் ஒன்றுபட்டிருக்கும் மக்கள் கூட்டம், முள்ளிவாய்க்காலின் 15ஆவது ஆண்டில் ஒன்றுபட்டிருக்கின்றது. ஆனால், முன்னரைப் போலவே அச்சத்துடனும், பதற்றத்துட னுமே மக்கள் இம்முறையும் ஒன்றுகூட வேண்டியிருக்கின்றது. இது பதினைந்து வருடகால நல்லிணக்க முயற்சிகளின் தோல்வியாகும். மேலாதிக்கத்தால் ஒரு போதுமே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. இதனை புரிந்துகொண்டு செயல்பட்டால் மட்டும்தான், அரசாங்கத்தால் நல்லிணக்க முயற்சியில் முன்னோக்கி பயணிக்கமுடியும் - என்றுள்ளது.

## தொழில்...

நிதி உதவி மற்றும் பயிற்சி வழங்க அரசாங்கம் தயாராகவுள்ளது எனவும் ஜனாதிபதி கூறினார்.

இலங்கையில் முதன்முறையாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் கேகாலையில் உருவாக்கப்பட்ட பசுமை இல்லத்தை பார்வையிட சென்ற போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

## பாதிக்கப்பட்ட...

இலங்கை அரசாங்கத்திடம் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளது.

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவ அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளின் நேர்மைத்தன்மை தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினரும், சிவில் சமூக செயல்பாட்டாளர்களும் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்த உத்தேச ஆணைக்குழு தொடர்பான தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, சுவீடன், பின்லாந்து, அவுஸ்திரேலியா, நேபாளம் உள்ளிட்ட சர்வதேச நாடுகளை தளமாகக் கொண்டு இயங்கி வரும் மனித உரிமைகள் சட்ட வல்லுநர்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள் தமது கையெழுத்துடன் கூடிய கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளனர். (எ)

## நினைவேந்தல்...

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து 15 வருடங்களாகின்ற நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள், முன்னாள் போராளிகள், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களை சந்தித்தேன்.

இலங்கையில் இன்றும் பல குடும்பங்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன. தங்கள் அன்புக்குரியவர்களை நினைகூருவதற்கு அனைத்துக் குடும்பங்களுக்கும் உரிமையுள்ளது.

அவர்களின் கதைகள் அமைதியான நீடித்த அரசியல் தீர்வின் அவசியத்தை நினைவுபடுத்துகின்றன என அமெரிக்கத் தூதுவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

## மிருசுவில்...

போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மனு அழைக்கப்பட்ட நேரத்தில், மனுதாரர் தரப்பில் வாதாடிய ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன், இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - ஜனாதிபதியின் மன்னிப்பின் பின்னர் விடுவிக்கப்பட்ட இராணுவ சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க ஆகியோருக்கு அழைப் பாணை அனுப்புமாறு நீதிமன்றை கோரினார்.

இந்தக் கோரிக்கையை ஏற்ற நீதிபதிகள் குழாம், சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கியது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டது. அத்துடன், மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்ட இராணுவ சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவுக்கும் அழைப்பாணை விடுக்கப்பட்டது.

தொடர்ந்து, உண்மைகளை உறுதிப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட மனுவை செப்ரெம்பர் 4ஆம் திகதிக்கு அழைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் - தென்மராட்சி - மிருசுவிலில் கடந்த 2000ஆம் ஆண்டு டிசெம்பர் 19ஆம் திகதி 5 வயது சிறுவன் உட்பட 8 பேர் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டனர். இவர்களின் உடல்கள் புதைக்கப்பட்டனர். இது தொடர்பான வழக்கில் கொழும்பு மேல் நீதிமன்றம் இராணுவ சார்ஜன்டான சுனில் ரத்நாயக்காவுக்கு கடந்த 2017 மே 20 அன்று மரண தண்டனை விதித்தது.

இதை எதிர்த்து சுனில் ரத்நாயக்கா உயர்நீதிமன்றில் மேன்முறையீடு செய்தார். மூன்று நீதியரசர்கள் கொண்ட அமர்வு வழக்கை விசாரித்து தண்டனையை உறுதி செய்தது. இதன்பின்னர், சுனில் ரத்நாயக்கவை கடந்த 2020 மார்ச் 26ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பில் விடுதலை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பொறுப்பானவர்களை...

இன்றைய தினம் தமிழின அழிப்பின் - முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் 15ஆவது ஆண்டாக நினைவுகூரப்படுகின்றது. இந்த நிலையில், ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் நேற்று வெளியிட்ட அறிக்கை யிலேயே இந்த விடயத்தை வலியுறுத்தி யுள்ளார்.

அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் படைத் தரப்பினர் மற்றும் இராணுவத் துணைக் குழுக்களின் ஈடுபாட்டை ஒப்புக்கொள்ளவும் - பகிரங்க மன்னிப்புக் கேட்கவும் அரசாங்கத்தை அவர் கேட்டுள்ளார். மேலும், காணாமல் ஆக்கப்பட்ட அனைத்து இலங்கையர்களையும் ஒருபோதும் மறக்க முடியாது என்பதை இந்த அறிக்கை நினைவூட்டுவதாக ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அவர்களுடைய குடும்பங்களும் அவர்களை பற்றி அக்கறை கொண்டவர்களும் நீண்டகாலமாகக் காத்திருக்கிறார்கள். உண்மையை அறிய அவர்களுக்கு உரிமை உண்டு. பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் அரசாங்கம் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளது.

அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையை அங்கீகரித்தமை - காணாமல் போனோருக்கான பணிமனை மற்றும் இழப்பீட்டு பணிமனையை நிறுவியமை போன்ற சாதகமாக தோன்றும் நடவடிக்கைகளை பதவியேற்ற அரசாங்கங்கள் செய்த போதிலும் தனிப்பட்ட வழக்குகளை விரிவான முறையில் தீர்ப்பதில் குறிப்பிடும்படியான உறுதியான முன்னேற்றம் குறைவாகவே உள்ளது.

1970கள் மற்றும் 2009ஆம் ஆண்டுக்கு இடையில், பரவலான பலவந்தமான காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களை இலங்கை படைகளும் அதனுடன் இணைந்த துணை இராணுவக் குழுக்களும் செய்தன. தமிழீழ விடுதலைப் புலிகளும் கடத்தல்களில் ஈடுபட்டுள்ளனர்.

தனி நபர்கள் மற்றும் குழுவினருடனான நேர்காணல்களின் அடிப்படையில், வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், குறிப்பாக பெண்களின்மீது, நீடித்த உளவியல், சமூக மற்றும் பொருளாதார தாக்கங்கள் குறித்து அந்த அறிக்கை விபரிக்கிறது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் ஆண்களாவர். பெண்களே அந்தக் குடும்பத்தின் ஒரே வருமானமீட்டும் நபராகினர். இதனால், அவர்களின் குடும்பத்தை சேர்ந்த பெண்கள் பாலியல் துன்புறுத்தல் மற்றும் சுரண்டல் போன்ற அபாயங்களுக்கு உள்ளாகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டுபிடிப்பதில் முன்னிலையில் நிற்கும் பெண்கள் இராணுவம், பொலிஸாரால் துன்புறுத்தல் - மிரட்டல் மற்றும் கண்காணிப்பு - சித்திரவதைகளுக்கு உள்ளாகின்றனர். மேலும், சர்வதேச சட்டத்தின் கீழ், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தலைவிதி மற்றும் இருப்பிடம் தெளிவுபடுத்தப்படும் வரை, பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான வழக்குகளைத் தீர்ப்பது அரசின் தெளிவான கடமையாகும்.

அரசால் அடுத்தடுத்து விசாரணை ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. இருப்பினும், அவர்களின் சில அறிக்கைகள் மட்டுமே பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன, வெளியிடப்பட்டாலும் அவை மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. பெரும்பாலான பரிந்துரைகள் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் தொடர்பானவை செயல்படுத்தப்படவில்லை. தற்போதைய மற்றும் முன்னாள் மூத்த அதிகாரிகள் மற்றும் இராஜதந்திரிகள் உட்பட குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளிகள் தொடர்ந்து நீதியின் பிடியிலிருந்து தப்பித்து வருகின்றனர்.

ஆயுத மோதல்கள் முடிவடைந்து ஏறக்குறைய 15 வருடங்கள் கடந்தபோதிலும் இன்றுவரை இலங்கை அதிகாரிகள் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் தவறி வருகின்றனர். பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்பட வேண்டும். நல்லிணக்கம் வெற்றியளிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தவல்ல நிறுவன சீர்திருத்தங்களை நாம் காணவேண்டும் - என்றும் ஆணையாளர் அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஐ)

## முள்ளிவாய்க்கால்...

எங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடு களை பொது நிறுவனங்கள், அரசியல் கட்சிகள், மாணவர் அமைப்புகள் மற் றும் பொதுமக்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. (ஐ-எ)

## இலங்கையின்...

நாணய நிதியத்தின் மாதாந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறுகையில்,

கடன் மறுசீரமைப்பை பொறுத்த மட்டில் வெளியக தனியார் கடன் வழங்குநர்களுடனான கடன் மறுசீரமைப்புப் பேச்சுகளை நிறைவுசெய்ய வேண்டியிருப்பதுடன், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் எட்டப்பட்ட கொள்கை இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. உள்ளக கடன் மறுசீரமைப்பு செயன்முறை பெருமளவுக்கு பூர்த்தி செய்யப்பட்டு விட்டது. சர்வதேச பிணைமுறிதாரர்களுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட ஆரம்பகட்டப் பேச்சுகள் எவ்வித இணக்கப்பாடுமின்றி கடந்த ஏப்ரல் மாத நடுப்பகுதியில் முடிவுக்கு வந்தது.

இதேவேளை, அவர்களுடன் கொள்கை இணக்கப்பாட்டை எட்டும் நோக்கிலான பேச்சுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதே போன்று உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களின் பக்கத்தில் கொள்கை இணக்கப்பாடுகள் இன்னமும் இறுதியாக உறுதிப்படுத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளன- என்றார். (எ)

## தமிழ்...

கட்சிகளை அணிதிரட்டும் செயல்பாட்டை தமிழீழ விடு தலை இயக்கம் ஒற்றுமை யாக முன்னெடுத்து வருவதோடு தேசியத்தை நேசிக்கின்ற ஏனைய கட்சிகளை உள்வாங்குவதற்கான பேச்சுக ளையும் ஆரம்பித்துள்ளது.

அந்த வகையிலே எமது மக்களுக்காகவும், மண்ணுக்காகவும் துப்பாக்கி ஏந்திய நாம் எம் மண்ணையும், மக்களையும் காப்பாற்றும் செயல்பாட்டை தொடர்ந்து செய்வோம். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மீது நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் கட்சிகளை ஒன்றிணைக்கும் எமது செயல்பாடு தொடர்பாக இதுவரை அந்தக் கட்சியுடன் கலந்துரையாடவில்லை. அந்த வழக்கு தொடர்பான முடிவு வரும் பட்சத்தில் அவர்களுடன் பேசி பொதுச் சின்னத்தில் இணைந்து செயல்படத் தயாராக இருக்கின்றோம்

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் என செய்திகள் வருகின்றன. எங்களைப் பொறுத்த வரை எமது மக்களின் பிரச்னைகளை ஓங்கி ஒலிக்க வேண்டியதே பிரதானமாகும். அந்த வகையிலே இரண்டு தேர்தல்களையும் சந்திப்பதற்குத் தயாராகவே இருக்கின்றோம்.

எமது மக்களை மோசமாக நடத்துபவர்கள், எமது நிலங்களை அபகரித்தவர்களுக்கு ஜனாதிபதித் தேர்தலின் போது எமது மக்கள் ஆதரவு கொடுக்க மாட்டார்கள். அத்துடன், இவ்வாறான அடக்குமுறைகள் காரணமாகவே தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயம் மேலோங்கி இருக்கின்றது. இந்த விடயம் தொடர்பில் தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றோம்- என்றார். (ஐ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## புதுக்குடியிருப்பு நகரில் மர்ம பொதியால் பரபரப்பு



புதுக்குடியிருப்பு, மே 18

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் காணப்பட்ட மர்மப் பொதியால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

புதுக்குடியிருப்பு இலங்கை வங்கிக்கு அருகாமையில் மர்மப் பொதி ஒன்று அடையாளம் காணப்பட்டதையடுத்து குறித்த பகுதி மக்கள் மத்தியில் பரபரப்பு நிலை ஏற்பட்டது.

இது தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்குத் தகவல் தெரியப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் குறித்த மர்மப் பொதியைப் பரிசோதனை செய்யும் போது குறித்த பொதியின் உரிமையாளர் தன்னாலே இப்பொதி தவறவிடப்பட்டது எனக் கூறி அடையாளம் காட்டி பொலிஸாரிடமிருந்து பெற்றுச் சென்றார்.

## ஏஐ நவீன தொழில்நுட்பத்துடன் விவசாயத்தில் புதிய மாற்றம்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கேகாலை, மே 18

செயற்கை நுண்ணறிவு (AI) உள்ளிட்ட நவீன தொழில்நுட்பத்துடன் இலங்கையின் விவசாயத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், அதற்குத் தயாராகவுள்ள தனியார்த்துறை தொழில்முனைவோருக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

விவசாய நவீன மயமாக்கல் வேலைத்திட்டத்துக்காக 100 பிரதேச செயலாளர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இலங்கையில் முதன்முறையாக நிர்மாணிக்கப்பட்ட பசுமை இல்லத்தை பார்வையிடுவதற்காக நேற்று கேகாலைக்கு சென்ற போதே மேற்கண்டவாறு கூறினார். (எ)

## போலி மருத்துவர்களினால் போதை மாத்திரை விற்பனை

கொழும்பு, மே 18

நாட்டில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலி மருத்துவர்கள் உள்ளனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அவர்களில் சிலர் பொதுமக்களுக்குப் போதை மாத்திரைகளை விற்பனை செய்வதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் சலின் விஜேசிங்க தெரிவித்தார். இவ்வாறான போலி மருத்துவர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல் கிடைத்தால் 1907 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தெரிவிக்குமாறும் அவர் அறிவித்துள்ளார்.

இந்த நிலையில், போலி மருத்துவர்களில் பெரும்பாலானோர் மருத்துவத் துறை தொடர்பில் எந்தவித முன் அனுபவமும், திறனும் இல்லாதவர்கள் எனவும் அவர் கூறினார். (எ)

### ஆர்ப்பாட்டத்தில் அரங்கேறிய கொடூரம்

# துப்பாக்கிச் சூட்டில் மூவர் உயிரிழப்பு பிரிகேடியர் உட்பட நால்வர் விடுதலை

கம்பஹா, மே 18

**வெலிவேரியா, ரத்துபஸ்வல பிரதேசத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது மூவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் இராணுவ பிரிகேடியர் உட்பட 4 இராணுவத்தினரை விடுதலை செய்து கம்பஹா மேல்நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தது.**

கடந்த 2013 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி கம்பஹா, வெலிவேரியா, ரத்துபஸ்வல பிரதேசத்தில் சுத்தமான குடிநீரை வழங்கக் கோரி பொது மக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் மூவர் உயிரிழந்ததுடன் 50 பேர் படுகாயமடைந்தனர்.

இதனையடுத்து இராணுவப் பிரிகேடியர் உட்பட நான்கு இராணுவத்தினர் மீது கம்பஹா மேல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்ற நீதிபதிகள் ஆயத்தினால் நேற்று இவ்வாறு தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதிகள் அனைவரும் குறித்த சந்தர்ப்பத்தில் சட்ட விரோதமாக அங்கு ஒன்று கூடிய தாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை நிரூபிக்க முடியாமையை அடுத்தே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக நீதிபதிகள் ஆயம் அறிவித்துள்ளது. (எ)

# வட மாகாண அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார்

### ஆளுநரிடம் கூறினார் அமெரிக்க தூதுவர்



யாழ்ப்பாணம், மே 18

வடக்கு மாகாணத்துக்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயார் - இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸுக்கும், அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிற்கும் இடையில் ஆளுநர் அலுவலகத்தில் நேற்று விசேட சந்திப்பு இடம்பெற்றது.

வடக்கு மாகாண அபிவிருத்திச் செயல்பாடுகள், கல்வி, சுற்றுலாத் துறை, காணி விடுவிப்பு, தீவுகளுக்கான போக்குவரத்து வசதிகள், தொழில் வாய்ப்புக்கள், முதலீட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

கால்நடை உற்பத்திகளை மேம்படுத்த வேண்டியுள்ளதாகவும், இயந்திர தொழில்நுட்ப பயன்பாட்டை மக்கள் மயப்படுத்த வேண்டும் எனவும் இதன்போது ஆளுநர் வலியுறுத்தினார்.

காணி விடுவிப்பு, விடுவிக்கப்பட்டுள்ள காணிகளுக்குள் மக்கள் பிரவேசிப்பதற்கான வசதிகள் தொடர்பிலும் அமெரிக்கத் தூதுவர், ஆளுநரிடம் கேட்டறிந்துகொண்டார். ஜனாதிபதியின் வழிகாட்டுதல்களுக்கு அமைய, காணி விடுவிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஆளுநர் கூறினார். அத்துடன் அண்மையில் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் பிரவேசிப்ப தற்கான வீதிகள் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி திறக்கப்படுவதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

மேலும், வடக்கில் காணப்படும் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய கண்காட்சி செயல்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அமெரிக்கத் தூதுவரிடம் ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.

வடக்கு மாகாணத்துக்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராகவுள்ளதாகத் தெரிவித்த அமெரிக்கத் தூதுவர், மாணவர்களுக்கு இலவச ஆங்கில மொழி வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளதாகவும், அதற்கான ஒத்துழைப்புக்களை ஆளுநரிடமிருந்து எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

27 வருடங்களின் பின்னர் அமெரிக்க அமைதி காக்கும் கழகத்தின் ஊடாக இலங்கையில் இலவச ஆங்கில மொழி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அமெரிக்கத் தூதுவர் கூறினார். (எ-2)

# காதலனை கடத்தியமை தொடர்பில் காதலி மற்றும் அவரது தந்தை கைது

கொழும்பு, மே 18

ஓட்டோவில் 18 வயது இளைஞனைக் கடத்திச் சென்ற சந்தேகத்தின் பேரில் 17 வயது இளைஞனின் காதலி மற்றும் அவரது தந்தையை அகலவத்தை பொலிஸார் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு - மஹரகம, பொலேகொட பிரதேசத்தில் வசிக்கும் இந்த இளைஞன் ஓட்டோவை பழுது பார்ப்பதற்காகச் சென்ற வேளை அவர் தாக்கப்பட்டுக் கடத்தப்பட்டதாக பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட போது இந்த இளைஞன் அவரது காதலியின் வீட்டில் இருப்பதை பொலிஸார் கண்டறிந்தனர் .

இதனையடுத்து குறித்த இளைஞனை பொலிஸார் மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதுடன் இளைஞனின் காதலி மற்றும் அவரது தந்தையை கைது செய்த பொலிஸார் மத்துகம நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். (எ)

# பாதாள குழுவை சேர்ந்த மேலும் மூவர் சிக்கினர்!

கொழும்பு, மே 18

பாதாள உலகச் செயல்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட விசேட 20 குழுவினரால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த மேலும் மூவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது பாதாள உலகக் கும்பலுடன் தொடர்புகளைப் பேணியதாகக் கூறப்படும் மேலும் 14 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் இதுவரை பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த 1038 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.